winmeen.com

# NOTES

# QUESTIONS

## 6ஆம் வகுப்பு
## பொதுத்தமிழ் பாடக்குறிப்புகள்
## (வினாக்கள் வடிவில்)



## ஆறாம் வகுப்பு - பொதுத்தமிழ் பாடக்குறிப்புகள் பகுதி – 1

**1] கண்ணில் கலந்தான் கருத்தில் கலந்தான்என்; எண்ணில் கலந்தே இருக்கின்றான்- பண்ணில் - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர்?**

1] சீறாப்புராணம், உமறுப்புலவர்

2] மணிமேகலை, சீத்தலைச்சாத்தனார்

3] கலிங்கத்துப்பரணி, சயம்கொண்டார்

**4] திருவருட்பா, இராமலிங்க அடிகளார்**

**2] கலந்தான்என் பாட்டில் கலந்தான் உயிரில்; கலந்தான் கருணை கலந்து - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர்?**

1] சீறாப்புராணம், உமறுப்புலவர்

2] மணிமேகலை, சீத்தலைச்சாத்தனார்

3] கலிங்கத்துப்பரணி, சயம்கொண்டார்

**4] திருவருட்பா, இராமலிங்க அடிகளார்**

**3] இராமலிங்க அடிகளார் --------------- என்னும் சிறப்புப் பெயர் பெற்றவர்.**

1] தெய்வப்புலவர்

2] அமுது அடியடைந்த அன்பர்

3] தம்பிரான் தோழர்

**4] திருவருட்பிரகாச வள்ளலார்**

**4] இராமலிங்க அடிகளார் (திருவருட்பிரகாச வள்ளலார்) ---------------- ஊரில் பிறந்தவர்?**

1] திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி

2] தூத்துக்குடி மாவட்டம் நாகலாபுரம்

3] திண்டுக்கல் மாவட்டம் வத்தலக்குண்டு

**4] கடலூர் மாவட்டம் மருதூர்**

**5] இராமலிங்க அடிகளார் (திருவருட்பிரகாச வள்ளலார்) பெற்றோர் பெயர்?**

1] வெங்கட்ராமன் - அம்மணி அம்மாள்

2] சாத்தப்பன் - விசாலாட்சி

**3] இராமையா - சின்னம்மையார்**

4] நாதமுனி - மிளகாயி அம்மாள்

**6] ஜீவகாருண்யஒழுக்கம், மனுமுறை கண்டவாசகம் ஆகிய நூல்களின் ஆசிரியர்?**

1] உமறுப்புலவர்

2] சீத்தலைச்சாத்தனார்

3] சயம்கொண்டார்

**4] இராமலிங்க அடிகளார்**

**7] சமரச சன்மார்க்க நெறியை வழங்கியவர் இவரே?**

1] உமறுப்புலவர்

2] சீத்தலைச்சாத்தனார்

3] சயம்கொண்டார்

**4] இராமலிங்க அடிகளார்**

**8] கீழ்க்கண்ட கூற்று யாருடன் தொடர்புடையது?**

**அனைத்து மதங்களின் நல்லிணக்கத்திற்காகச் சன்மார்க்க சங்கத்தையும், பசித்துயர் போக்கி மக்களுக்கு உணவளிக்க அறச்சாலையும் அமைத்தவர். அறிவுநெறி விளங்க ஞானசபையையும் நிறுவியவர்.**

1] உமறுப்புலவர்

2] சீத்தலைச்சாத்தனார்

3] சயம்கொண்டார்

**4] இராமலிங்க அடிகளார்**

**9] வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடிய கருணை மனம் இவருடையது. வடலூர் சத்திய தருமச்சாலையில், பசியால் வாடும் மக்களுக்கு சோறிட, இவர் அன்று மூட்டிய அடுப்பு இன்றும் அணையாமல், தொடர்ந்து பசிப்பிணி தீர்த்து வருகிறது.**

1] உமறுப்புலவர்

2] சீத்தலைச்சாத்தனார்

3] சயம்கொண்டார்

**4] இராமலிங்க அடிகளார்**

**10] இராமலிங்க அடிகளார் அவர்களுடைய காலம்?**

**1] 05.10.1823 முதல் 30.01.1874 வரை**

2] 05.10.1824 முதல் 30.01.1875 வரை

3] 05.10.1825 முதல் 30.01.1876 வரை

4] 05.10.1826 முதல் 30.01.1877 வரை

**11] இராமலிங்க அடிகளாரது பாடல்கள் -------------- என்னும் தலைப்பில் தொகுக்கப்பட்டுள்ளன.**

1] இராமலிங்க அடிகளார் கவிதைகள்

2] சத்தியஞான சபை நூல்கள்

**3] திருவருட்பா**

4] இவற்றில் ஏதுமில்லை

**12] விடுபட்டதை நிரப்புக.**

**அன்பிற்கும் உண்டோ அடைக்கும்தாழ் ஆர்வலர்**

**---------- ------------- ---------**

**1] புன்கணீர் பூசல் தரும்**

2] என்பும் உரியர் பிறர்க்கு

3] என்போடு இயைந்த தொடர்பு

4] நண்புஎன்னும் நாடாச் சிறப்பு

winmeen.com

**13] விடுபட்டதை நிரப்புக.**

**அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்**

----------- ------------- ----------

1] புன்கணீர் பூசல் தரும்

**2] என்பும் உரியர் பிறர்க்கு**

3] என்போடு இயைந்த தொடர்பு

4] நண்புஎன்னும் நாடாச் சிறப்பு

**14] விடுபட்டதை நிரப்புக.**

**அன்போடு இயைந்த வழக்குஎன்ப ஆருயிருக்கு**

--------------- -------- ------------

1] புன்கணீர் பூசல் தரும்

2] என்பும் உரியர் பிறர்க்கு

**3] என்போடு இயைந்த தொடர்பு**

4] நண்புஎன்னும் நாடாச் சிறப்பு

**15] விடுபட்டதை நிரப்புக.**

**அன்புஈனும் ஆர்வம் உடைமை அதுஈனும்**

------------ ------------ ----------

1] புன்கணீர் பூசல் தரும்

2] என்பும் உரியர் பிறர்க்கு

3] என்போடு இயைந்த தொடர்பு

**4] நண்புஎன்னும் நாடாச் சிறப்பு**

**16] விடுபட்டதை நிரப்புக.**

**அன்புற்று அமர்ந்த வழக்குஎன்ப வையகத்து**

----------- ---------- ------------

**1] இன்புற்றார் எய்தும் சிறப்பு**

2] மறத்திற்கும் அஃதே துணை

3] அன்பி லதனை அறம்

4] வற்றல் மரம்தளிர்த் தற்று

**17] விடுபட்டதை நிரப்புக.**

**அறத்திற்கே அன்புசார்பு என்ப அறியார்**

---------- ---------- ----------

1] இன்புற்றார் எய்தும் சிறப்பு

**2] மறத்திற்கும் அஃதே துணை**

3] அன்பி லதனை அறம்

4] வற்றல் மரம்தளிர்த் தற்று

winmeen.com

**18] விடுபட்டதை நிரப்புக.**

**என்பி லதனை வெயில்போலக் காயுமே**

------------ --------------- ---------

1] இன்புற்றார் எய்தும் சிறப்பு

2] மறத்திற்கும் அஃதே துணை

**3] அன்பி லதனை அறம்**

4] வற்றல் மரம்தளிர்த் தற்று

**19] விடுபட்டதை நிரப்புக.**

**அன்பகத்து இல்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்**

-------------- ---------------- -----------

1] இன்புற்றார் எய்தும் சிறப்பு

2] மறத்திற்கும் அஃதே துணை

3] அன்பி லதனை அறம்

**4] வற்றல் மரம்தளிர்த் தற்று**

**20] விடுபட்டதை நிரப்புக.**

**புறத்துறப்பு எல்லாம் எவன்செய்யும் யாக்கை**

------------- ------------ ------------

**1] அகத்துறப்பு அன்பி லவர்க்கு**

2] மறத்திற்கும் அஃதே துணை

3] அன்பி லதனை அறம்

4] வற்றல் மரம்தளிர்த் தற்று

**21] விடுபட்டதை நிரப்புக.**

**அன்பின் வலியது உயர்நிலை அஃதிலார்க்கு**

------------- ------------ ------------

**1] என்புதோல் போர்த்த உடம்பு**

2] மறத்திற்கும் அஃதே துணை

3] அன்பி லதனை அறம்

4] வற்றல் மரம்தளிர்த் தற்று

**22] பொருந்தாதது எது? சொற்பொருள் தருக.**

1] ஆர்வலர் – அன்புடையவர்

2] புன்கணீர் – துன்பம் கண்டு பெருகும் கண்ணீர்

3] பூசல் தரும் – வெளிப்பட்டு நிற்கும்

**4] என்பு - எறும்பு**

**குறிப்பு :- என்பு - எலும்பு (என்பு என்பது எலும்பு, இங்கு உடல், பொருள், ஆவியைக் குறிக்கிறது)**

**23] பொருந்தாதது எது? சொற்பொருள் தருக.**

1] வழக்கு – வாழ்க்கைநெறி

2] ஆருயிர் – அருமையான உயிர்

3] என்பு – எலும்பு

**4] ஈனும் - பெறும்**

**குறிப்பு :- ஈனும் - தரும்**

**24] பொருந்தாதது எது? சொற்பொருள் தருக.**

1] ஆர்வம் – விருப்பம் ( வெறுப்பை நீக்கி விருப்பத்தை உண்டாக்கும் என்பது பொருள் )

**2] நண்பு – நன்மை**

3] வையகம் - உலகம்

4] என்ப - என்பார்கள்

**குறிப்பு:- நண்பு – நட்பு**

**25] பொருந்தாதது எது? சொற்பொருள் தருக.**

1] மறம் - வீரம்

2] என்பிலது - எலும்பு இல்லாதது (புழு)

3] அன்பிலது - அன்பில்லாத உயிர்கள்

**4] கேழல் - மான்**

**குறிப்பு :- கேழல் - பன்றி**

**26] பொருந்தாதது எது? பிரித்தறிதல்**

1] அன்பகத்து இல்லா - அன்பு + அகத்து + இல்லா

2] வன்பாற்கண் - வன்பால் + கண்

3] தளிர்த்தற்று - தளிர்த்து + அற்று

**4] பைங்கூழ் - பைங் + கூழ்**

**குறிப்பு :- பைங்கூழ் - பசுமை + கூழ்**

**27] திருவள்ளுவர் அவர்களின் காலம் ------------ என்று கூறுவர்.**

1] கி.மு. 29

2] கி.மு. 30

**3] கி.மு. 31**

4] கி.மு. 32

**28] செந்நாப்போதார், தெய்வப்புலவர், நாயனார் என வேறு பெயர்களால் அழைக்கப்படுபவர் யார்?**

1] மாணிக்கவாசகர்

2] ஔவையார்

**3] திருவள்ளுவர்**

4] கம்பர்

**29] திருக்குறள் ------------------ நூல்களுள் ஒன்று**

1] ஐம்பெரும் காப்பியங்கள்

2] ஐம்சிறும் காப்பியங்கள்

**3] பதினெண் கீழ்க்கணக்கு**

4] பதினெண் மேல்கணக்கு

**30] முப்பால், பொதுமறை, தமிழ்மறை - எனவும் அழைக்கப்படும் நூல் எது?**

1] கலிங்கத்துப்பரணி

2] புறநானூறு

3] சிலப்பதிகாரம்

**4] திருக்குறள்**

**31] கி.பி. 2018 ஐத் திருவள்ளுவர் ஆண்டு ------------- என்று கூறுவோம்.**

1] 2046

2] 2047

3] 2048

**4] 2049**

**குறிப்பு :- திருவள்ளுவர் ஆண்டு கணக்கிடும் முறை :- கிறித்து ஆண்டு (கி.பி) + 31 = திருவள்ளுவர் ஆண்டு. எடுத்துக்காட்டு : 2018 + 31 = 2049. (கி.பி 2018 ஐத் திருவள்ளுவர் ஆண்டு 2049 கூறுவோம்).**

**32] திருக்குறளில் ---------------- அதிகாரங்கள் உள்ளன.**

1] 233

**2] 133**

3] 113

4] 1113

**33] கீழ்க்கண்டவர்களுள் தமிழ்த்தாத்தா என்று அழைக்கப்படுபவர் யார்?**

1] மறைமலையடிகள்

2] தாயுமானவர்

3] பாவாணர்

**4] உ.வே.சாமிநாதர்**

**34] உ.வே.சாமிநாதர் அவர்கள் தேடிச்சென்ற ஓலைச்சுவடி இருந்த இடம்?**

**1] ஈரோடு மாவட்டத்தில் உள்ள கொடுமுடி**

2] சிவகங்கை மாவட்டத்தில் உள்ள காரைக்குடி

3] தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள எட்டயபுரம்

4] திருவாரூர் மாவட்டத்தில் உள்ள நீடாமங்கலம்

**35] ஓலைச்சுவடி எழுத்துகளில் புள்ளி இருக்காது. ஒற்றைக்கொம்பு, இரட்டைக்கொம்பு வேறுபாடு இருக்காது. பேரன் என்பதனைப் ----------------- என்றும் வாசிக்கலாம். ----------- என்றும் வாசிக்கலாம். முன்னும் பின்னும் உள்ள வரிகளை வைத்துப் பொருள் கொள்ளுதல் வேண்டும்.**

1] பெயரன, பேயரன

**2] பெரன, பேரன**

3] பெர, பேர

4] இவற்றில் ஏதுமில்லை

**36] 'குறிஞ்சிப்பாட்டு' என்னும் சுவடியை அச்சில் பதிப்பதற்காக எழுதிக் கொண்டிருந்தார், உ.வே. சாமிநாதர். அச்சுவடியில் ---------- வகையான பூக்களின் பெயர்கள் இருந்தன. அவற்றுள் --------------- வகையான பூக்களுடைய பெயர்கள் மட்டுமே தெளிவாக இருந்தன.**

1] 108, 105

2] 100, 99

**3] 99, 96**

7] 75, 85

**37] 'குறிஞ்சிப்பாட்டு' என்னும் நூலின் ஆசிரியர் யார்?**

1] மாணிக்கவாசகர்

2] நல்லாதனார்

3] கம்பர்

**4] கபிலர்**

**38] 'குறிஞ்சிப்பாட்டு' --------------- நூல்களுள் ஒன்று.**

1] எட்டுத்தொகை

**2] பத்துப்பாட்டு**

3] பதினெண் கீழ்க்கணக்கு

4] சிற்றிலக்கியம்

**39] உ.வே. சாமிநாதர் அவர்கள் பிறந்த ஊர்?**

**1] திருவாரூர் மாவட்டத்தில் உள்ள உத்தமதானபுரம்**

2] காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள துள்ளம்

3] தேனி மாவட்டத்தில் உள்ள கம்பம்

4] விருதுநகர் மாவட்டத்தில் உள்ள திருச்சுழி

**40] உ.வே. சாமிநாதர் அவர்களின் இயற்பெயர்?**

1] வேங்கட மகாலிங்கம்

2] சுப்புரத்தினம்

3] ராஜேந்திரன்

**4] வேங்கடரத்தினம்**



winmeen.com

**41] உ.வே. சாமிநாதர் அவர்களுடைய ஆசிரியர் பெயர்?**

1] சுந்தர மகாலிங்கம்

2] வேங்கட மகாலிங்கம்

3] சுத்தானந்த பாரதி

**4] மகாவித்துவான் மீனாட்சி சுந்தரனார்**

**42] உ.வே. சாமிநாதர் அவர்களுடைய ஆசிரியர் உ.வே. சாமிநாதர் அவர்களுக்கு வைத்த பெயர் என்ன?**

1] சுஜாதா

**2] சாமிநாதன்**

3] குன்னுடையான்

4] செல்லப்பன்

**43] உ.வே. சாமிநாதர் அவர்களுடைய தந்தை பெயர்?**

1] வேலுத்துரை

2] வேலுச்சாமி

3] வெள்ளையங்கிரி

**4] வேங்கட சுப்பு**

**44] உ.வே. சாமிநாதர் அவர்களுடைய காலம்?**

1] 19.02.1852 முதல் 28.04.1939

2] 19.02.1853 முதல் 28.04.1940

3] 19.02.1854 முதல் 28.04.1941

**4] 19.02.1855 முதல் 28.04.1942**

**45] ------------------ என்பவர், தம் வாழ்க்கை வரலாற்றை ஆனந்தவிகடன் இதழில் தொடராக எழுதினார். அஃது என் சரிதம் என்னும் பெயரில் நூலாக வந்தது.**

1] பாரதியார்

2] பாரதிதாசன்

3] மறைமலையடிகள்

**4] உ.வே.சாமிநாதர்**

**46] உ. வே. சா. அவர்களின் பெயரால் ------------------ ஆம் ஆண்டு நிறுவப்பட்ட டாக்டர் உ. வே. சா. நூல் நிலையம் இன்றும் சென்னையில் உள்ள பெசண்ட் நகரில் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.**

**1] 1942**

2] 1943

3] 1944

4] 1945

**47] --------------- என்பவரின் தமிழ்ப் பணிகளை வெளிநாட்டு அறிஞர்களான ஜி.யு.போப், சூலியல் வின்சோன் ஆகியோர் பெரிதும் பாராட்டியுள்ளனர்.**

1] பாரதியார்

2] பாரதிதாசன்

3] மறைமலையடிகள்

**4] உ.வே.சாமிநாதர்**

**48] நடுவணரசு, உ. வே. சா. அவர்களின் தமிழ்த்தொண்டினைப் பெருமைப்படுத்தும் வகையில் ----------------- ஆம் ஆண்டு அஞ்சல்தலை வெளியிட்டுச் சிறப்பித்துள்ளது.**

1] 2000

2] 2004

**3] 2006**

4] 2010

**49] உ. வே. சாமிநாதர் அவர்களின் நினைவு இல்லம் அமைந்துள்ள இடம்?**

1] உதகமண்டலம்

**2] உத்தமதானபுரம்**

3] உத்தமபாளையம்

4] இவற்றில் ஏதுமில்லை

**50] பொருந்தாதது எது? உ.வே.சா பதிப்பித்த நூல்கள்**

1] எட்டுத்தொகை (8)

2] பத்துப்பாட்டு (10)

3] சீவகசிந்தாமணி (1)

**4] திருக்குறள் (1)**

**குறிப்பு :- உ.வே.சா பதிப்பித்த நூல்கள்:- 1] எட்டுத்தொகை (8); 2] பத்துப்பாட்டு (10); 3] சீவகசிந்தாமணி (1); 4] சிலப்பதிகாரம் (1); 5] மணிமேகலை (1); 6] புராணங்கள் (12); 7] உலா (9); 8] கோவை (6); 9] தூது (6); 10] வெண்பா நூல்கள் (13); 11] அந்தாதி (3); 12] பரணி (2); 13] மும்மணிக்கோவை (2); 14] இரட்டைமணிமாலை (2); 15] பிற பிரபந்தங்கள் (4).**

**51] சிறுமி சடகோ எந்த நாட்டைச் சார்ந்தவள்?**

1] சீனா

2] ரஷ்யா

**3] ஜப்பான்**

4] அமெரிக்கா

**52] சிறுமி சடகோ தோழியின் பெயர் என்ன?**

1] சுவாசி

2] சிமு

**3] சிசுகோ**

4] புஜி

**53] ஜப்பானியர் வணங்கும் பறவை?**

1] புறா

2] கழுகு

3] காகம்

**4] கொக்கு**

**54] சிசுகோ, சடகோவைப் பார்த்து, "கவலைப்படாதே! நான் செய்ததுபோல் ------------ கொக்குகள் செய். புற்றுநோய் குணமாகும் என்றாள்.**

1] 100

2] 200

3] 500

**4] 1000**

**55] சடகோ இறந்த ஆண்டு?**

**1] 1955 ஆம் ஆண்டு அக்டோபர் 25 ஆம் நாள்**

2] 1956 ஆம் ஆண்டு அக்டோபர் 25 ஆம் நாள்

3] 1957 ஆம் ஆண்டு அக்டோபர் 25 ஆம் நாள்

4] 1958 ஆம் ஆண்டு அக்டோபர் 25 ஆம் நாள்

**56] சடகோ மொத்தம் எத்தனை கொக்குகள் செய்தார்?**

1] 344

2] 444

3] 544

**4] 644**

**57] காகிதத்தில் உருவங்கள் செய்யும் கலையை ஜப்பானியர் ----------------- என்று கூறுவர்.**

1] நெப்டோகாமி

2] சிஸ்டோகாமி

3] வெரிகாமி

**4] ஓரிகாமி**

**58] சடகோ ஆயிரம் கொக்குகள் செய்ய, இன்னும் எத்தனை கொக்குகள் வேண்டியிருந்தது?**

1] 256

**2] 356**

3] 456

4] 556

**59] ----------------- நகரின் மையத்தில் சடகோ என்ற சிறுமிக்கு நினைவாலயம் கட்டினார்கள். அதற்கு குழந்தைகள் அமைதி நினைவாலயம் என்று பெயர் சூட்டினார்கள்.**

**1] ஹிரோசிமா**

2] நாகசாகி

3] டோக்கியோ

4] ஒசாகா

**குறிப்பு :- சிறுமி சடகோ கதையை எழுதியவர் - அரவிந்த குப்தா எழுதிய "டென் லிட்டில் பிங்கர்ஸ்"**

**60] சடகோவுக்கு நம்பிக்கை தந்தவர்?**

1] மருத்துவர்

2] பெற்றோர்

**3] தோழி சிசுகோ**

4] பள்ளி தலைமையாசிரியர்

**61] டேரிபாக்ஸ் எந்த நாட்டைச் சார்ந்தவர்?**

1] இத்தாலி

**2] கனடா**

3] பிரேசில்

4] ஜப்பான்

**62] டேரிபாக்ஸ் எந்த விளையாட்டு வீரர்?**

1] கால்பந்து

2] கைப்பந்து

3] மட்டைப்பந்து

**4] கூடைப்பந்து**

**63] டேரிபாக்ஸ் புற்றுநோய் ஓட்டம் - நடத்தப்படும் நாள்?**

**1] ஆண்டுதோறும் செப்டம்பர் 15**

2] ஆண்டுதோறும் ஆகஸ்டு 15

3] ஆண்டுதோறும் ஜூலை 15

4] ஆண்டுதோறும் ஜூன் 15

## ஆறாம் வகுப்பு - பொதுத்தமிழ் பாடக்குறிப்புகள் பகுதி – 2

**1] நாய்க்கால் சிறுவிரல்போல் நன்கணிய ராயினும் ஈக்கால் துணையும் உதவாதார் நட்பென்னாம் - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர் என்ன?**

1] நான்மணிக்கடிகை, விளம்பி நாகனார்

2] பழமொழி நானூறு, முன்றுறை அரையனார்

3] கலிங்கத்துப்பரணி, சயம் கொண்டார்

**4] நாலடியார், சமண முனிவர்கள்**

**2] சேய்த்தானும் சென்று கொளல்வேண்டும் செய்விளைக்கும் வாய்க்கால் அனையார் தொடர்பு - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர் என்ன?**

1] நான்மணிக்கடிகை, விளம்பி நாகனார்

2] பழமொழி நானூறு, முன்றுறை அரையனார்

3] கலிங்கத்துப்பரணி, சயம் கொண்டார்

**4] நாலடியார், சமண முனிவர்கள்**

**3] பொருந்தாதது எது? சொற்பொருள் தருக.**

**1] சேய்மை - அருகில்**

2] செய் - வயல்

3] அனையார் - போன்றோர்

4] அணியர் - நெருங்கி இருப்பவர்

**குறிப்பு :- சேய்மை - தொலைவு**

**4] நாலடியார் -------------------- நூல்களுள் ஒன்று.**

1] ஐம்பெரும் காப்பியங்கள்

2] ஐஞ்சிறு காப்பியங்கள்

**3] பதினெண் கீழ்க்கணக்கு**

4] பதினெண் மேல்கணக்கு

**5] நாலடியார் ---------------- பாடல்களைக் கொண்டது**

1] 96

2] 108

3] 350

**4] 400**

**குறிப்பு :- பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று நாலடியார். இந்நூல் நானூறு பாடல்களைக் கொண்டது. அறக்கருத்துக்களைக் கூறுவது. 'நாலடி நானூறு' என்னும் சிறப்புப் பெயரும் இதற்கு உண்டு. இந்நூல் சமண முனிவர் பலர் பாடிய பாடல்களின் தொகுப்பு.**

**6] பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் பெரும்பாலானவை -------------------------?**

1] நீதி நூல்கள்

**2] அற நூல்கள்**

3] சமய நூல்கள்

4] இவற்றில் ஏதுமில்லை

**7] ஆயுதம் செய்வோம் நல்ல காகிதம் செய்வோம்; ஆலைகள் வைப்போம்கல்விச் சாலைகள் வைப்போம்; ஓயுதல் செய்யோம்தலை சாயுதல் செய்யோம்; உண்மைகள் சொல்வோம்பல வண்மைகள் செய்வோம் - இந்த பாடல் வரியின் ஆசிரியர் யார்?**

**1] பாரதியார்**

2] பாரதிதாசன்

3] வாணிதாசன்

4] நாமக்கல் கவிஞர்

**குறிப்பு :- "வெள்ளிப் பனிமலையின்மீது உலாவுவோம்" எனத் தொடங்கும் பாடலின் ஒரு பகுதி.**

**8] குடைகள் செய்வோம்உழு படைகள் செய்வோம்; கோணிகள் செய்வோம்இரும் பாணிகள் செய்வோம்; நடையும் பறப்புமுணர் வண்டிகள் செய்வோம்; ஞாலம் நடுங்கவரும் கப்பல்கள் செய்வோம் - இந்த பாடல் வரியின் ஆசிரியர் யார்?**

**1] பாரதியார்**

2] பாரதிதாசன்

3] வாணிதாசன்

4] நாமக்கல் கவிஞர்

**குறிப்பு :- "வெள்ளிப் பனிமலையின்மீது உலாவுவோம்" எனத் தொடங்கும் பாடலின் ஒரு பகுதி.**

**9] காவியம் செய்வோம் நல்ல காடு வளர்ப்போம்; கலை வளர்ப்போம் கொல்லர் உலைவளர்ப்போம்; ஓவியம் செய்வோம்நல்ல ஊசிகள் செய்வோம்; உலகத் தொழிலனைத்தும் உவந்து செய்வோம் - இந்த பாடல் வரியின் ஆசிரியர் யார்?**

**1] பாரதியார்**

2] பாரதிதாசன்

3] வாணிதாசன்

4] நாமக்கல் கவிஞர்

**குறிப்பு :- "வெள்ளிப் பனிமலையின்மீது உலாவுவோம்" எனத் தொடங்கும் பாடலின் ஒரு பகுதி.**

winmeen.com

**10] சாதி இரண்டொழிய வேறில்லை யென்றே; தமிழ்மகள் சொல்லியசொல் அமிழ்தமென்போம்; நீதி நெறியினின்று பிறர்க்குதவும்; நேர்மையர் மேலவர், கீழவர் மற்றோர் - இந்த பாடல் வரியின் ஆசிரியர் யார்?**

**1] பாரதியார்**

2] பாரதிதாசன்

3] வாணிதாசன்

4] நாமக்கல் கவிஞர்

**குறிப்பு :- "வெள்ளிப் பனிமலையின்மீது உலாவுவோம்" எனத் தொடங்கும் பாடலின் ஒரு பகுதி.**

**11] "பாட்டுக்கொரு புலவன் ------------" என்று கொண்டாடப்பட்டவர்?**

**1] பாரதியார்**

2] பாரதிதாசன்

3] வாணிதாசன்

4] நாமக்கல் கவிஞர்

**12] பாரதியார் அவர்களின் காலம்?**

**1] 11.12.1882 முதல் 11.09.1921 வரை**

2] 11.12.1892 முதல் 11.09.1931 வரை

3] 11.12.1872 முதல் 11.09.1921 வரை

4] 11.12.1852 முதல் 11.09.1911 வரை

**13] பொருந்தாதது எது? சொற்பொருள் தருக.**

**1] வண்மை - பகை**

2] கோணி - சாக்கு

3] தமிழ்மகள் - ஔவையர்

4] ஞாலம் - உலகம்

**குறிப்பு :- வண்மை - கொடை**

**14] "சாதி இரண்டொழிய வேறில்லை" - எனக் கூறிய தமிழ்மகள் --------------------?**

1] காக்கைப் பாடியனார்

2] ஆதிமந்தி

**3] ஔவையார்**

4] வெள்ளி வீதியார்

**15] உலகம் முழுவதும் இருந்து பல நாட்டுப் பறவைகள் வந்து தங்கி இருக்கும் இடத்துக்குப் பெயர்தான் --------------------?**

1] பட்டி

2] தொழுவம்

**3] பறவைகள் புகலிடம்**

4] கூடு

**16] தமிழ்நாட்டில் பட்டாசு வெடிக்காத ஊர் எது?**

1] வத்தலக்குண்டு (திண்டுக்கல்)

2] மன்னார்குடி (திருவாரூர்)

3] சிவகாசி (விருதுநகர்)

**4] கூந்தன்குளம் (திருநெல்வேலி)**

**17] பனி மற்றும் வெயில் கூடுதலாக இருக்கும் போது பறவைகள் அந்த இடத்தை விட்டுப் பறந்து செல்லும். இப்படிப் பறந்து செல்வதனை, ---------------------- என்பார்கள்.**

1] நகர் வலம்

2] இடப்பெயர்ச்சி காலம்

**3] வலசை போதல்**

4] இவற்றில் ஏதுமில்லை

**18] நம் நாட்டில் ஏறத்தாழ ----------------- வகைப் பறவைகள் வாழ்கின்றன.**

1] 14500

2] 13800

3] 9800

**4] 2400**

winmeen.com

**19] பறவைகளை ------------------- வகையாகப் பிரிக்கலாம்.**

1] 2 2] 3 3] 4 **4] 5**

**குறிப்பு :- பறவைகளை ஐந்து வகையாகப் பிரிக்கலாம், அவையாவன:-**

**1. தேனைக் குடித்து வாழும் பறவைகள்; 2. பழத்தை உண்டு வாழும் பறவைகள்; 3. பூச்சியைத் தின்று வாழும் பறவைகள்; 4. வேட்டையாடி உண்ணும் பறவைகள்; 5. இறந்த உடல்களை உண்டு வாழும் பறவைகள்**

**20] --------------------------- பறவை நிலத்திலும் அடர் உப்புத் தன்மை உள்ள நீரிலும் வாழும். கடும் வெப்பத்தை எதிர்கொள்ளும் தன்மை கொண்டது.**

1] கடலைக்குயில்

2] பனங்காடை

3] தூக்கணாங்குருவி

**4] பூநாரை**

**21] தவறானது எது? சமவெளி மரங்களில் வாழும் சில பறவைகள்: மஞ்சள் சிட்டு, செங்காகம், சுடலைக்குயில், பனங்காடை, தூக்கணாங்குருவி, அரிவாள் மூக்கன்.**

1] சுடலைக்குயில்

2] பனங்காடை

3] தூக்கணாங்குருவி

**4] அரிவாள் மூக்கன்**

**குறிப்பு :- நீர்நிலையில் வாழும் பறவை - அரிவாள் மூக்கன்**

**22] தவறானது எது? நீர்நிலைகளில் வாழும் சில பறவைகள்: கொக்கு, தாழைக்கோழி, பவளக் காலி, ஆற்று உள்ளான், முக்குளிப்பான், நாரை, அரிவாள் மூக்கன், கரண்டி வாயன், ஊசிவால் வாத்து, பனங்காடை.**

1] அரிவாள் மூக்கன்

2] கரண்டி வாயன்

3] ஊசிவால் வாத்து

**4] பனங்காடை**

**குறிப்பு :- சமவெளி மரங்களில் வாழும் பறவை - பனங்காடை.**

**23] தவறானது எது? மலைகளில் வாழும் சில பறவைகள்: இருவாச்சி, செந்தலைப் பூங்குருவி, மின்சிட்டு, கருஞ்சின்னான், நீலகிரி நெட்டைக்காலி, பொன்முதுகு, மரங்கொத்தி, சின்னக்குறுவான், கொண்டை உழவாரன், இராசாளிப் பருந்து, பூமன் ஆந்தை, கரண்டி வாயன்.**

1] கொண்டை உழவாரன்

2] இராசாளிப் பருந்து

3] பூமன் ஆந்தை

**4] கரண்டி வாயன்**

**குறிப்பு :- நீர்நிலையில் வாழும் பறவை - கரண்டி வாயன்.**

**24] பாம்பினம், உலகில் மனித இனம் தோன்றுவதற்கு ------------------ ஆண்டுகளுக்கு முன்பே தோன்றியது.**

1] 100 கோடி

**2] 10 கோடி**

3] 100 இலட்சம்

4] 10 இலட்சம்

**25] கீழ்க்கண்ட கூற்று எந்த பாம்பைப் பற்றியது?**

**இந்தியாவில் உள்ள ------------------------ பாம்பு தான் உலகிலேயே நஞ்சுமிக்க மிக நீளமான பாம்பு. 15 அடி நீளமுடையது. கூடுகட்டி வாழும் ஒரே வகைப் பாம்பு இது. மற்றப் பாம்புகளையும் கூட உணவாக்கிக் கொள்ளும்.**

1] மலைப்பாம்பு

2] கொம்பேறி மூக்கன்

**3] இராஜநாகம்**

4] கண்ணாடி விரியன்

**26] சென்னையில் பாம்புப் பண்ணை உள்ள இடம்?**

1] நுங்கம்பாக்கம்

2] ராயபுரம்

**3] கிண்டி**

4] திருவான்மியூர்

winmeen.com

**27] உலகம் முழுக்க ------------------------ வகைப் பாம்புகள் இருக்கின்றனவாம். இந்தியாவில் மட்டும் ------------------- வகைப்பாம்புகள் காணப்படுகிறது.**

1] 4000, 670

2] 1456, 450

3] 3250, 567

**4] 2750, 244**

**28] பாம்பு வகைகளில் --------------------- வகைப்பாம்புகளுக்கு மட்டும்தான் நச்சுத்தன்மை இருக்கிறது.**

1] 15

2] 45

**3] 52**

4] 67

**29] கீழ்க்கண்ட கூற்றில் தவறானது எது?**

1] பாம்பு, பால் குடிக்காது. அவை விழுங்குகிற எலி, தவளைகள் உடம்பில் உள்ள நீர்ச்சத்தே அதற்குப் போதும். பாம்பு, தான் பிடிக்கும் இரையைக் கொல்லவும், செரிப்பதற்காகவும் தன்னுடைய பற்களில் நஞ்சு வைத்திருக்கிறது

2] ஒரு பாம்பைக் கொன்றால், அதன் இணைப் பாம்பு பழிவாங்கும் என்று சொல்வது உண்டு. இஃது உண்மையன்று. கொல்லப்பட்ட பாம்பின் உடம்பில் இருந்து வெளியேறும் ஒருவகை வாசனைப் பொருள், மற்றப் பாம்புகளையும் அந்த இடம் நோக்கி வரவழைக்கிறது. பழிவாங்க, பாம்புகள் வருவது இல்லை

3] பாம்பு, தன் நாக்கை அடிக்கடி வெளியே நீட்டும், சுற்றுப்புறத்தின் வாசனையை அறிந்துகொள்ளவே அவ்வாறு செய்கிறது.

**4] பாம்புக்கு காது நன்றாக கேட்கும்**

**குறிப்பு :- பாம்புக்குக் காது அவ்வளவாக வளர்ச்சி அடையவில்லை. காற்றில் வரும் ஓசைகளைப் பாம்பினால் கேட்க இயலாது. தரையில் ஏற்படும் அதிர்வுகளை உணர்ந்து, அதன்மூலம் பாம்பு முன்னெச்சரிக்கையாக இருக்கிறது.**

**30] -------------- பாம்பின் நஞ்சு, கோப்ராக்சின் என்னும் வலிநீக்கி மருந்து செய்யப் பயன்படுகிறது.**

1] இராஜநாகம்

2] கண்ணாடி விரியன்

3] சாரைப் பாம்பு

**4] நல்ல பாம்பு**

**31] தோலுக்காகப் பாம்புகள் கொல்லப்படுவதனைத் தடுக்க, இந்திய அரசு, வனவிலங்குப் பாதுகாப்புச் சட்டம் ----------------- இன்படி சட்டம் நிறைவேற்றி உள்ளது.**

1] 1969

2] 1970

3] 1971

**4] 1972**

**32] ------------------------ உழவர்களின் நண்பன்.**

1] எலி

2] நாய்

3] பறவை

**4] பாம்பு**

**33] தமிழ் நாட்டில் உள்ள பறவைகள் புகலிடங்கள். தவறான மாவட்டம் எது?**

1] வேடந்தாங்கல், கரிக்கிரி (காஞ்சிபுரம் மாவட்டம்)

2] கஞ்சிரங்குளம், சித்திரங்குடி, மேல்செல்வனூர் (இராமநாதபுரம் மாவட்டம்)

3] பழவேற்காடு (திருவள்ளூர் மாவட்டம்)

**4] உதயமார்த்தாண்டம் (விருதுநகர் மாவட்டம்)**

**குறிப்பு :- உதயமார்த்தாண்டம் (திருவாரூர் மாவட்டம்)**

**34] தமிழ் நாட்டில் உள்ள பறவைகள் புகலிடங்கள். தவறான மாவட்டம் எது?**

1] வடுவூர் (தஞ்சை மாவட்டம்)

2] கரைவெட்டி (பெரம்பலூர் மாவட்டம்)

3] வேட்டங்குடி (சிவகங்கை மாவட்டம்)

**4] வெள்ளோடு (திருச்சி மாவட்டம்)**

**குறிப்பு :- வெள்ளோடு (ஈரோடு மாவட்டம்)**

**35] தமிழ் நாட்டில் உள்ள பறவைகள் புகலிடங்கள். தவறான மாவட்டம் எது?**

1] பழவேற்காடு (திருவள்ளூர் மாவட்டம்)

2] கரைவெட்டி (பெரம்பலூர் மாவட்டம்)

3] கூந்தன்குளம் (திருநெல்வேலி மாவட்டம்)

**4] கோடியக்கரை ( திருவாரூர் மாவட்டம்)**

**குறிப்பு :- கோடியக்கரை (நாகப்பட்டினம் மாவட்டம்)**

**36] தமிழில் உள்ள முதல் எழுத்துகள் மொத்தம் ------------?**

1] 12

2] 18

**3] 30**

4] 216

**37] தமிழ்நாட்டில் உள்ள பறவைகள் சரணாலயங்கள் எத்தனை?**

1] 10

**2] 13**

3] 12

4] 16

winmeen.com

## ஆறாம் வகுப்பு - பொதுத்தமிழ் பாடக்குறிப்புகள் பகுதி – 3

**1] மனைக்கு விளக்கம் மடவார்; மடவார் தனக்குத் தகைசால் புதல்வர் - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர் என்ன?**

1] கலிங்கத்துப்பரணி, சயம்கொண்டார்

2] புறநானூறு, கண்ணகனார்

3] பழமொழி நானூறு, முன்றுறை அரையனார்

**4] நான்மணிக்கடிகை, விளம்பிநாகனார்**

**குறிப்பு :- நூலாசிரியரின் பெயர் விளம்பிநாகனார். விளம்பி என்பது ஊர்ப்பெயர். நாகனார் என்பது புலவரின் இயற்பெயர்.**

**2] மனக்கினிய காதல் புதல்வர்க்குக் கல்வியே; கல்விக்கும் ஓதின் புகழ்சால் உணர்வு - - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர் என்ன?**

1] கலிங்கத்துப்பரணி, சயம்கொண்டார்

2] புறநானூறு, கண்ணகனார்

3] பழமொழி நானூறு, முன்றுறை அரையனார்

**4] நான்மணிக்கடிகை, விளம்பிநாகனார்**

**குறிப்பு :- நூலாசிரியரின் பெயர் விளம்பிநாகனார். விளம்பி என்பது ஊர்ப்பெயர். நாகனார் என்பது புலவரின் இயற்பெயர்.**

**3] பொருந்தாதது எது? சொற்பொருள் தருக.**

**1] மடவார் - ஆண்கள்**

2] தகைசால் - பண்பில் சிறந்த

3] மனக்கினிய - மனத்துக்கு இனிய

4] காதல் புதல்வர் - அன்பு மக்கள்

**குறிப்பு :- மடவார் - பெண்கள்**

**4] பொருந்தாதது எது? சொற்பொருள் தருக.**

1] ஓதின் - எதுவென்று சொல்லும்போது

2] புகழ்சால் - புகழைத் தரும்

3] உணர்வு - நல்லெண்ணம்

**4] கேழல் - மான்**

**குறிப்பு :- கேழல் - பன்றி**

**5] நான்மணிக்கடிகை என்பது ----------------------- நூல்களுள் ஒன்று.**

1] ஐம்பெரும் காப்பியங்கள்

2] ஐஞ்சிறும் காப்பியங்கள்

**3] பதினெண்கீழ்க்கணக்கு**

4] பதினெண் மேல்கணக்கு

**6] கடிகை என்றால் --------------- என்பது பொருள்.**

1] சிரிப்பு

2] மலர்

**3] அணிகலன்**

4] எண்ணம்

**குறிப்பு :- நான்மணிக்கடிகை, பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. கடிகை என்றால் அணிகலன் என்பது பொருள். நான்கு மணிகள் கொண்ட அணிகலன் என்பது இதன்பொருள். ஒவ்வொரு பாட்டும் நான்கு அறக்கருத்துகளைக் கூறுகின்றது.**

**7] மனைக்கு விளக்கம் ---------------------?**

**1] மடவார்**

2] புதல்வர்

3] கல்வி

4] புகழ்

**8] ஆராரோ ஆரிரரோ ஆராரோ; ஆரிரரோகண்ணே கண்மணியே - இது எந்த வகைப் பாடல்?**

1] நாட்டுப்புறப் பாடல்

2] வாய்மொழி இலக்கியம்

**3] தாலாட்டுப் பாடல்**

4] கானாப் பாடல்

**9] ஒருவர் பாடிக் கொண்டிருக்கும்போது கேட்டுக் கொண்டிருக்கும் இன்னொருவர் அப்படியே மனத்தில் வாங்கித் தானும் பாடிப்பாடிப் பழகிவிடுவார். இப்படித் தாளில் எழுதாத பாடல்தான், “------------------ பாடல்” எனப்படுகிறது.**

**1] நாட்டுப்புறப் பாடல்**

2] வாய்மொழி இலக்கியம்

3] தாலாட்டுப் பாடல்

4] கானாப் பாடல்

**10] எழுத்து வழியாக வராமல் பாடிப்பாடி வாய்வழியாகப் பரவுகிற பாட்டு ------------------- பாட்டு ஆகும்.**

**1] நாட்டுப்புறப் பாடல்**

2] வாய்மொழி இலக்கியம்

3] தாலாட்டுப் பாடல்

4] கானாப் பாடல்

**11] எழுதப்படாத, எல்லோருக்கும் தெரிந்த கதைகளும் உண்டு. இவற்றை எல்லாம் “------------------------” எனக் கூறுவர். முன்னர் இப்பாடல்களைக் கிராமியப் பாடல்கள் என்று கூறினர்.**

1] நாட்டுப்புறப் பாடல்

**2] வாய்மொழி இலக்கியம்**

3] தாலாட்டுப் பாடல்

4] கானாப் பாடல்

**12] கொழுக்கட்டை கொழுக்கட்டை ஏன் வேகல? அடுப்பு எரியல நான் வேகல. அடுப்பே அடுப்பே ஏன் எரியல? மழை பெய்தது நான் எரியல. - இது எந்த வகைப் பாடல்?**

**1] நாட்டுப்புறப் பாடல்**

2] வாய்மொழி இலக்கியம்

3] தாலாட்டுப் பாடல்

4] கானாப் பாடல்

**13] மழையே மழையே ஏன் பெய்தே? புல்லு வளர நான் பெய்தேன். புல்லே புல்லே ஏன் வளர்ந்தே? மாடு தின்ன நான் வளர்ந்தேன் - இது எந்த வகைப் பாடல்?**

**1] நாட்டுப்புறப் பாடல்**

2] வாய்மொழி இலக்கியம்

3] தாலாட்டுப் பாடல்

4] கானாப் பாடல்

**14] வெள்ளிப் பிடி அருவா; ஏ! விடலைப் பிள்ளை கை அருவா; சொல்லியடிச்சிருவா - இப்போ சுழட்டுதடி நெல்கதிரே - இது ------------ வகைப் பாடல்.**

1] நாட்டுப்புறப் பாடல்

**2] அறுவடைப் பாடல்**

3] தாலாட்டுப் பாடல்

4] கானாப் பாடல்

**15] ஏட்டில் எழுதாத பாடல்தான், “------------------ பாடல்” எனப்படுகிறது.**

**1] நாட்டுப்புறப் பாடல்**

2] வாய்மொழி இலக்கியம்

3] தாலாட்டுப் பாடல்

4] கானாப் பாடல்

**16] சென்னை போன்ற பெரு நகரங்களில் மக்கள் பாடும் ----------------- கூட நாட்டுப்புறப் பாடல்தான்.**

1] ஒப்பாரிப் பாடல்

2] வாய்மொழி இலக்கியம்

3] தாலாட்டுப் பாடல்

**4] கானாப் பாடல்**

**17] சுவாமி விவேகானந்தர் அவர்களின் இயற்பெயர் என்ன?**

1] இந்திரஜித்

2] சாலமன்

**3] நரேந்திரதத்**

4] இவற்றில் ஏதுமில்லை

winmeen.com

**18] "வீரச்சிறுவன்" - என்னும் கதைப்பகுதி நூலின் ஆசிரியர் யார்?**

1] ராஜம்கிருஷ்ணன்

2] சுஜாதா

3] அழ. வள்ளியப்பா

**4] ஜானகிமணாளன்**

**குறிப்பு :- ஜானகிமணாளன் - அறிவை வளர்க்கும் அற்புதக் கதைகள்.**

**19] "ஆனம்" - என்பதன் பொருள்?**

1] கோபம்

2] சிரிப்பு

3] உறவு

**4] குழம்பு**

**20] தமிழ்ச்சொற்கள் ----------------- வகைப்படும்.**

1] 1 2] 2 3] 3 **4] 4**

**குறிப்பு :- 1] பெயர்ச்சொல் 2] வினைச்சொல் 3] இடைச்சொல் 4] உரிச்சொல்**

**21] கல்விக்கு விளக்குப் போன்றது எது?**

**1] நல்லெண்ணம்**

2] தீய எண்ணம்

3] வாதம் செய்தல்

4] இவற்றில் ஏதுமில்லை

**22] ஏழையென்றும் அடிமையென்றும் எவனுமில்லை சாதியில்; இழிவு கொண்ட மனிதரென்பது இந்தியாவில் இல்லையே - இந்த கூற்று யாருடையது?**

**1] பாரதியார்**

2] பாரதிதாசன்

3] வாணிதாசன்

4] நாமக்கல் கவிஞர்

## ஆறாம் வகுப்பு - பொதுத்தமிழ் பாடக்குறிப்புகள் பகுதி – 4

**1] மழையே மழையே வா வா – நல்ல; வானப் புனலே வா வா – இவ்; வையத் தமுதே வா வா - இந்தப் பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர்?**

1] பாரதியார், பாப்பா பாட்டு

2] வாணிதாசன், குழந்தை இலக்கியம்

**3] பாரதிதாசன், இசையமுது**

4] நாமக்கல் கவிஞர், சங்கொலி

**2] தகரப் பந்தல் தணதண வென்ன; தாழும் கூரை சளசள வென்ன; நகரப் பெண்கள் செப்புக் குடங்கள்; நன்றெங் கும்கண கணகண வென்ன (மழையே மழையே…) - இந்தப் பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர்?**

1] பாரதியார், பாப்பா பாட்டு

2] வாணிதாசன், குழந்தை இலக்கியம்

**3] பாரதிதாசன், இசையமுது**

4] நாமக்கல் கவிஞர், சங்கொலி

**3] ஏரிகுளங்கள் வழியும்படி, நாடு; எங்கும் இன்பம் பொழியும்படி, பொடி; வாரித்தூவும் பூவும் காயும்; மரமும் தழையும் நனைந்திடும்படி (மழையே மழையே...) - இந்தப் பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர்?**

1] பாரதியார், பாப்பா பாட்டு

2] வாணிதாசன், குழந்தை இலக்கியம்

**3] பாரதிதாசன், இசையமுது**

4] நாமக்கல் கவிஞர், சங்கொலி

**4] தழையா வெப்பம் தழைக்கவும் மெய்; தாங்கா வெப்பம் நீங்கவும்; உழுவார் எல்லாம் மலைபோல் எருதை; ஒட்டிப் பொன்னேர் பூட்டவும் (மழையே மழையே...) - இந்தப் பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர்?**

1] பாரதியார், பாப்பா பாட்டு

2] வாணிதாசன், குழந்தை இலக்கியம்

**3] பாரதிதாசன், இசையமுது**

4] நாமக்கல் கவிஞர், சங்கொலி

**5] பொருந்தாதது எது? சொற்பொருள் தருக.**

1] வானப்புனல் – மழைநீர்

2] வையத்து அமுது – உலகின் அமுதம்

**3] வையம் – உறவு**

4] தகரப்பந்தல் – தகரத்தால் அமைக்கப்பட்ட பந்தல்

**குறிப்பு :- வையம் – உலகம்**

**6] பொருந்தாதது எது? சொற்பொருள் தருக.**

1] பொடி – மகரந்தப் பொடி

**2] தழை – காற்று**

3] தழையா வெப்பம் – பெருகும் வெப்பம்

4] தழைக்கவும் – குறையவும்

**குறிப்பு :- தழை – செடி**

**7] 'புரட்சிக் கவிஞர்' எனவும் 'பாவேந்தர்' எனவும் புகழப்படுபவர்?**

1] பாரதியார்

**2] பாரதிதாசன்**

3] வாணிதாசன்

4] நாமக்கல் கவிஞர்

**8] 'சுப்புரத்தினம்' - என்ற இயற்பெயர் உடைய கவிஞர் யார்?**

1] பாரதியார்

**2] பாரதிதாசன்**

3] வாணிதாசன்

4] நாமக்கல் கவிஞர்

**9] பாண்டியன் பரிசு, அழகின் சிரிப்பு, குடும்ப விளக்கு - ஆகிய நூல்களின் ஆசிரியர் யார்?**

1] பாரதியார்

**2] பாரதிதாசன்**

3] வாணிதாசன்

4] நாமக்கல் கவிஞர்

**10] பாரதிதாசன் அவர்களின் காலம்?**

1] 29.04.1861 முதல் 21.04.1944 வரை

**2] 29.04.1891 முதல் 21.04.1964 வரை**

3] 29.04.1881 முதல் 21.04.1954 வரை

4] 29.04.1891 முதல் 21.04.1974 வரை

**11] ஆற்றவும் கற்றார் அறிவுடையார்; அஃதுடையார் நாற்றிசையும் செல்லாத நாடில்லை; - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர்?**

1] நான்மணிக்கடிகை, விளம்பிநாகனார்

2] புறநானூறு, கண்ணகானர்

3] திரிகடுகம், நல்லாதனார்

**4] பழமொழி நானூறு, முன்றுறை அரையனார்**

**குறிப்பு :- இந்நூலின் ஆசிரியர் முன்றுறை அரையனார். முன்றுறை என்பது ஊர்ப்பெயர். அரையன் என்னும் சொல், அரசனைக் குறிக்கும். இவர் முன்றுறை என்ற ஊரை ஆண்ட அரசராக இருக்கலாம். அல்லது, அரையன் என்பது புலவரின் குடிப்பெயராகவும் இருக்கலாம். இப்பாடலில் வரும் பழமொழி, "ஆற்றுணா வேண்டுவது இல்" என்பது. இதற்குக் "கற்றவனுக்கு கட்டுச்சோறு வேண்டா" என்பது பொருள்.**

**12] அந்நாடு வேற்றுநாடு ஆகா, தமவேயாம்; ஆயினால் ஆற்றுணா வேண்டுவது இல் - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர்?**

1] நான்மணிக்கடிகை, விளம்பிநாகனார்

2] புறநானூறு, கண்ணகானர்

3] திரிகடுகம், நல்லாதனார்

**4] பழமொழி நானூறு, முன்றுறை அரையனார்**

**குறிப்பு :- இந்நூலின் ஆசிரியர் முன்றுறை அரையனார். முன்றுறை என்பது ஊர்ப்பெயர். அரையன் என்னும் சொல், அரசனைக் குறிக்கும். இவர் முன்றுறை என்ற ஊரை ஆண்ட அரசராக இருக்கலாம். அல்லது, அரையன் என்பது புலவரின் குடிப்பெயராகவும் இருக்கலாம். இப்பாடலில் வரும் பழமொழி, "ஆற்றுணா வேண்டுவது இல்" என்பது. இதற்குக் "கற்றவனுக்கு கட்டுச்சோறு வேண்டா" என்பது பொருள்.**

**13] பழமொழி நானூறு ----------------- நூல்களுள் ஒன்று.**

1] ஐம்பெரும் காப்பியங்கள்

winmeen.com

2] ஐஞ்சிறும் காப்பியங்கள்

**3] பதினெண் கீழ்க்கணக்கு**

4] பதினெண் மேல்கணக்கு

**14] பழமொழி நானூறு நூலில் எத்தனை பாடல்கள் உள்ளன?**

1] 120

2] 96

3] 386

**4] 400**

**15] ஜவகர்லால் நேரு அவர்கள் ---------------- ஆண்டு முதல் -------------- ஆண்டுகள் வரை தம் மகளுக்குக் (இந்திரா காந்தி) கடிதங்கள் எழுதிக்கொண்டே இருந்தார்.**

1] 1892 முதல் 1934

2] 1902 முதல் 1944

3] 1912 முதல் 1954

**4] 1922 முதல் 1964**

**16] ஜவகர்லால் நேரு அவர்கள் எத்தனை ஆண்டுகள் தம் மகளுக்குக் (இந்திரா காந்தி) கடிதங்கள் எழுதிக்கொண்டே இருந்தார்.**

1] 36

2] 38

3] 40

**4] 42**

**17] இந்திரா காந்தி அவர்கள் ----------------- கல்லூரியில் பயின்றார்.**

**1] தாகூரின் விசுவபாரதி கல்லூரி**

2] பனராசு இந்து பல்கலைக்கழகம்

3] மாநிலக் கல்லூரி

4] இவற்றில் ஏதுமில்லை

**18] விசுவபாரதி கல்லூரி எந்த மாநிலத்தல் உள்ளது?**

1] ராஜஸ்தான்

**2] மேற்கு வங்கம்**

3] ஒடிசா

4] கருநாடகா

**குறிப்பு :- மேற்கு வங்கம் - சாந்திநிகேதன் என்னும் இடத்தில் உள்ளது.**

**19] ஜவகர்லால் நேரு அவர்கள் தம் மகளுக்கு (இந்திரா காந்தி) எந்த சிறையில் இருந்து கடிதங்கள் எழுதினார்?**

1] டெல்லி சிறை

2] மேற்கு வங்கம் சிறை

**3] அல்மோரா சிறை**

4] இவற்றில் ஏதுமில்லை

**20] இந்திரா காந்தி அவர்கள் --------------- என்பவரின் உதவியுடன் படிக்க வேண்டிய பாடங்களை முடிவு செய்தார்.**

1] வினோபா பாவே

**2] கிருபாளினி**

3] சத்ய பாமா

4] இவர்களில் யாருமில்லை

**21] ஜவகர்லால் நேரு அவர்கள் படித்த பல்கலைக்கழகம்?**

1] ஆக்ஸ்போர்டு

**2] கேம்ப்ரிட்ஜ்**

3] கிங்ஸ்டன்

4] இவற்றில் ஏதுமில்லை

**22] புத்தகம் வாசிப்பதனைக் கடமையாக ஆக்குதல் கூடாது. கட்டாயப்படுத்தவும் கூடாது. அப்படிச் செய்தால், புத்தக வாசிப்பு மகிழ்ச்சியைத் தராது. வெறுப்பே உண்டாகும். - இந்த கூற்று யாருடையது?**

1] காந்தியடிகள்

**2] நேரு**

3] அண்ணா

4] பெரியார்

**23] "போரும் அமைதியும்" என்ற நூலின் ஆசிரியர் யார்?**

**1] டால்ஸ்டாய்**

2] சேக்சுபியர்

3] பிளேட்டோ

4] காளிதாசர்

**குறிப்பு :- உலகின் மிகச் சிறந்த நாவல்களில் ஒன்று, என இந்த நாவலை நேரு குறிப்பிட்டுள்ளார். ( "போரும் அமைதியும்" - டால்ஸ்டாய் )**

**24] கேம்ப்ரிட்ஜ் - எந்த நாட்டிலுள்ள பல்கலைக்கழகம்?**

1] ஜப்பான்

2] பிரான்சு

**3] இங்கிலாந்து**

4] அமெரிக்கா

**25] பிளேட்டோ ------------- மொழியின் சிந்தனையாளர்.**

1] எகிப்து

2] ஆங்கிலம்

3] இந்தி

**4] கிரேக்கம்**

**26] சாகுந்தலம் - என்ற நாடக நூலின் ஆசிரியர்?**

1] வால்ட் மில்டன்

2] யுவான் சுவாங்

3] போகர்

**4] காளிதாசர்**

**27] அல்மோரா சிறை எந்த மாநிலத்தில் உள்ளது?**

**1] உத்தராஞ்சல்**

2] கேரளா

3] பஞ்சாப்

4] ஒடிசா

## ஆறாம் வகுப்பு - பொதுத்தமிழ் பாடக்குறிப்புகள் பகுதி – 5

**1] வைதோரைக் கூட வையாதே – இந்த; வைய முழுவதும் பொய்த்தாலும் பொய்யாதே! வெய்ய வினைகள் செய்யாதே – கல்லை வீணில் பறவைகள் மீதில் எய்யாதே! - இந்த பாடல் வரியின் ஆசிரியர் யார்?**

1] போகர்

**2] கடுவெளிச் சித்தர்**

3] ஔவையார்

4] நல்லாதனார்

**2] பாம்பினைப் பற்றி ஆட்டாதே – உன்றன்; பத்தினி மார்களைப் பழித்துக் காட்டடதே! வேம்பினை உலகில் ஊட்டாதே- உன்றன் வீறாப்பு தன்னை விளங்க நாட்டாதே! - இந்த பாடல் வரியின் ஆசிரியர் யார்?**

1] போகர்

**2] கடுவெளிச் சித்தர்**

3] ஔவையார்

4] நல்லாதனார்

**3] போற்றும் சடங்கை நண்ணாதே – உன்னைப்; புகழ்ந்து பலரில் புகலல் ஒண்ணாதே! சாற்றும்முன் வாழ்வை எண்ணாதே – பிறர் தாழும் படிக்குநீ தாழ்வைப் பண்ணாதே! - இந்த பாடல் வரியின் ஆசிரியர் யார்?**

1] போகர்

**2] கடுவெளிச் சித்தர்**

3] ஔவையார்

4] நல்லாதனார்

**4] கள்ள வேடம் புனையாதே – பல கங்கையிலே உன்கடம் நனையாதே! கொள்ளை கொள்ள நினையாதே – நட்புக் கொண்டு பிரிந்துநீ கோள்முனையாதே! - இந்த பாடல் வரியின் ஆசிரியர் யார்?**

1] போகர்

**2] கடுவெளிச் சித்தர்**

3] ஔவையார்

4] நல்லாதனார்

**5] பொருந்தாதது எது? சொற்பொருள் தருக.**

1] வெய்யவினை – துன்பம் தரும் செயல்

**2] வேம்பு – இனிப்பான சொற்கள்**

3] வீறாப்பு – இறுமாப்பு

4] பலரில் – பலர் + இல், பலருடைய வீடுகள்

**குறிப்பு :- வேம்பு – கசப்பான சொற்கள்**

**6] பொருந்தாதது எது? சொற்பொருள் தருக.**

1] புகலல் ஒண்ணாதே – செல்லாதே

2] சாற்றும் – புகழ்ச்சியாகப் பேசுவது

3] கடம் – உடம்பு

**4] நவ்வி - பன்றி**

**குறிப்பு :- நவ்வி - மான்**

**7] கீழ்க்கண்ட கூற்றில் தவறானது எது?**

1] ஏறத்தாழ நானூறு ஆண்டுகளுக்குமுன் தமிழகத்தின் காடு மலைகளில் வாழ்ந்தவர்கள் சித்தர்கள்

2] பாம்பாட்டிச் சித்தர், குதும்பைச் சித்தர், அழுகுணிச் சித்தர் என்பன எல்லாமே காரணப் பெயர்கள்

**3] கடுவெளிச் சித்தர், உருவ வழிபாட்டில் அதிக நம்பிக்கை உடையவர்**

4] எளிய சொற்களில் அறிவுரைகளைக் கூறியவர்

**குறிப்பு :- கடுவெளிச் சித்தர், உருவ வழிபாடு செய்யாமல் வெட்ட வெளியையே கடவுளாக வழிபட்டவர்**

**8] ஈ.வெ.ரா பெரியார் அவர்களின் பெற்றோர் பெயர்?**

1] வெங்கட்ராமன் - அம்மணி அம்மாள்

2] சாத்தப்பன் - விசாலாட்சி

**3] வெங்கட்டப்பர் - சின்னத்தாயம்மாள்**

4] முத்தையா - ராஜம்மாள்

**9] ஈ.வெ.ரா பெரியார் அவர்களின் ஊர்?**

1] மதுரை

2] சேலம்

3] கேரளா

**4] ஈரோடு**

**10] கீழ்க்கண்டவர்களுள் "பகுத்தறிவாளர் சங்கத்தை" அமைத்தவர் யார்?**

1] அண்ணா

2] காந்தி

**3] பெரியார்**

4] எம்.ஜி.ஆர்

**11] இளமையிலே பெரியார், ---------------- என்பவரின் தொண்டரானார்.**

**1] காந்தி**

2] நேரு

3] ராஜாஜி

4] நேதாஜி

**12] கள்ளுக்கடை மறியலில் ஈடுபட்டார்; கள் இறக்குவதனைத் தடுப்பதற்காகத் தன்னுடைய தோப்பிலிருந்த தென்னை மரங்களை எல்லாம் வெட்டிச் சாய்த்தார். கதர் அணியவேண்டும் என்று பரப்புரை செய்தார். பிறப்பினால் வரும் கீழ்ச்சாதி - மேல்சாதி என்னும் வேறுபாடுகளை அகற்றி, மக்கள் அனைவரும் மனிதச்சாதி என்னும் ஓரினமாக எண்ண வேண்டும் என்றார் - இந்த கூற்று யாருடையது?**

1] காந்தி

2] அண்ணா

3] நேரு

**4] பெரியார்**



winmeen.com

**13] "வைக்கம் வீரர்" என்று அழைக்கப்படுபவர் யார்?**

1] காந்தி

2] அண்ணா

3] நேரு

**4] பெரியார்**

**14] "கீழ்ச்சாதி - மேல்சாதி வேற்றுமை, தீண்டாமைக் கொடுமைகள் அகல, எல்லாருக்கும் கல்வி தேவை; எல்லாரும் கல்வி பெறுதல் வேண்டும் " - என்று கூறியவர் யார்?**

1] அண்ணா

**2] பெரியார்**

3] காந்தி

4] நேரு

**15] "மனிதர்களை மனிதர்களாக மதிக்க வேண்டும் என்பதனை ஏற்கிறீர்கள். அதுபோல, மனிதர்களில் சரிபாதியாக உள்ள பெண்களையும் மதித்தல் வேண்டும். ஆண்கள் செய்யும் எல்லாவற்றையும் பெண்களும் செய்தல் வேண்டும். அவர்களால் செய்யவும் இயலும். பெண்களுக்கு நகையோ அழகான உடையோ முக்கியம் இல்லை; அறிவும் சுயமரியாதையும்தான் மிக முக்கியம்." - என்று கூறியவர் யார்? - என்று கூறியவர் யார்?**

1] அண்ணா

**2] பெரியார்**

3] காந்தி

4] நேரு

**16] பெண்விடுதலைக்கு முதற்படியாகப் பெண்கள் எல்லாரும் கல்வி கற்க வேண்டும் என்பதனை --------------- என்பவர் வலியுறுத்தினார்.**

1] அண்ணா

**2] பெரியார்**

3] காந்தி

4] நேரு

**17] பெண்கள் மற்போர், குத்துச்சண்டை முதலிய விளையாட்டுகளையும் கற்றுக்கொள்ளுதல் வேண்டும். அரசுப்பணி, இராணுவம், காவல்துறை முதலியவற்றிலும் பெண்களைச் சேர்க்க வேண்டும் - என்று கூறியவர்?**

1] அண்ணா

**2] பெரியார்**

3] காந்தி

4] நேரு

**18] குணத்திலும் அறிவிலும் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே வேறுபாடு இல்லை; இருவரும் நிகரானவர்களே என்பதனை மீண்டும் மீண்டும் வற்புறுத்தியவர்?**

1] அண்ணா

**2] பெரியார்**

3] காந்தி

4] நேரு

**19] 'அறிவு' என்பது வளர்ந்துகொண்டே இருக்கும்; எனவே, புதியனவற்றை ஏற்றல் வேண்டும்' என்று கூறியவர்?**

1] அண்ணா

**2] பெரியார்**

3] காந்தி

4] நேரு

**20] தந்தை பெரியார் - அவர்களின் காலம்?**

**1] 17.09.1879 முதல் 24.12.1973 வரை**

2] 17.09.1889 முதல் 24.12.1983 வரை

3] 17.09.1899 முதல் 24.12.1993 வரை

4] 17.09.1880 முதல் 24.12.1974 வரை

**21] பெரியார், தம் வாழ்நாளில் ---------------------- நாள், 13,12,000 கிலோ மீட்டர் தொலைவு பயணம் செய்து 10,700 கூட்டங்களில் 21,400 மணிநேரம் மக்களுக்காக உரையாற்றிச் சமுதாயத் தொண்டு ஆற்றினார்.**

**1] 8600**

2] 7600

3] 6600

4] 5600

**22] ----------------- ஆம் ஆண்டு சமுதாயச் சீர்திருத்தச் செயல்பாடுகளுக்காக ஐக்கிய நாடுகள் அவையின் "யுனெஸ்கோ விருது" பெரியாருக்கு வழங்கப்பட்டது.**

1] 1950

2] 1960

**3] 1970**

4] 1980

**23] நடுவண் அரசு ---------------- ஆம் ஆண்டு பெரியாரின் உருவம் பொறித்த அஞ்சல் தலையை வெளியிட்டுச் சிறப்பித்துள்ளது.**

1] 1948

2] 1958

3] 1968

**4] 1978**

**24] -------------- துறவிகளுக்குத் தங்கத்தில் மாம்பழம் செய்து, தானமாகக் கொடுத்து விருந்து வைத்தால், உங்களின் தாயாரின் மனம் அமைதி அடையும் - என்று அமைச்சர் அரசரிடம் கூறினார்.**

1] 96

2] 100

**3] 108**

4] 112

**25] பொறுமை, அமைதி, பேணுந்திறன் முதலியன பெண்களுக்கு மட்டுமே உரியவை எனவும் சினம், வீரம், ஆளுந்திறன் முதலியன ஆண்களுக்கு மட்டுமே உரியவை எனவும் கூறுவதனை ஏற்க இயலாது. இப்படிக் கூறுவது பெண்களை ஆட்டுக்கும் ஆண்களைப் புலிக்கும் ஒப்பாகக் கூறுவதுபோல் அல்லவா உள்ளது. பெண்களுக்கும் துணிவு, வீரம், ஆளுந்திறன் முதலியன உண்டு என்பதனை அனைவரும் ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும். அதுவே பெண் விடுதலை - என வீரமுழக்கமிட்டவர் யார்?**

1] அண்ணா

2] நேரு

3] காந்தி

**4] பெரியார்**

## ஆறாம் வகுப்பு - பொதுத்தமிழ் பாடக்குறிப்புகள் பகுதி – 6

**1] நாடாகு ஒன்றோ; காடாகு ஒன்றோ; அவலாகு ஒன்றோ; மிசையாகு ஒன்றோ; - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர்?**

1] பழமொழி நானூறு, முன்றுறை அரையனார்

2] நான்மணிக்கடிகை,விளம்பி நாகனார்

**3] புறநானூறு, ஔவையார்**

4] சயம்கொண்டார், கலிங்கத்துப்பரணி

**2] எவ்வழி நல்லவர் ஆடவர்; அவ்வழி நல்லை. வாழிய நிலனே! - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர்?**

1] பழமொழி நானூறு, முன்றுறை அரையனார்

2] நான்மணிக்கடிகை,விளம்பி நாகனார்

**3] புறநானூறு, ஔவையார்**

4] சயம்கொண்டார், கலிங்கத்துப்பரணி

**3] பொருந்தாதது எது? சொற்பொருள் தருக.**

1] அவல் – பள்ளம்

2] மிசை – கோபம்.

3] ஆடவர் – ஆண்கள் ( இங்கு மனிதர்களைப் பொதுவாக குறித்தது )

4] நல்லை – நல்லதாக இருக்கிறாய்

**குறிப்பு :- மிசை – மேடு**

**4] புறநானூறு - பிரித்து எழுதுக.**

1] புற + நானூறு

2] புறம் + நானூறு

3] புறநா + நூறு

**4] புறம் + நான்கு + நூறு**



winmeen.com

**5] புறநானூறு --------------- நூல்களுள் ஒன்று.**

**1] எட்டுத்தொகை**

2] பத்துப்பாட்டு

3] ஐம்பெரும் காப்பியங்கள்

4] ஐம்சிறும் காப்பியங்கள்

**6] கீழ்க்கண்ட கூற்று யாருடன் தொடர்புடையது?**

**இவர், சங்கப் புலவர். அதியமானின் நண்பர். அரிய நெல்லிக்கனியை அதியமானிடம் பெற்றவர். சங்க காலத்தில் பெண் கவிஞர் பலர் இருந்தனர். அவர்களுள் மிகுதியான பாடல்கள் பாடியவர் ஔவையார்.**

1] கம்பர்

2] பேகன்

3] புகழேந்திப் புலவர்

**4] ஔவையார்**

**குறிப்பு :- சங்கப்பாடல் பாடிய ஔவையாரும், ஆத்திச்சூடி பாடிய ஔவையாரும் ஒருவர் அல்லர். வேறு வேறானவர்.**

**7] உட்கார் நண்பா, நலந்தானா? – நீ; ஒதுங்கி வாழ்வது சரிதானா? சுட்டு விரல்நீ சுருங்குவதா? – உன் சுயபலம் உனக்குள் ஒடுங்குவதா? - இந்த பாடல் வரியின் ஆசிரியர் யார்?**

1] வாணிதாசன் ( எழிலோவியம் )

2] காமராசன் ( சூரியகாந்தி )

3] அப்துல் ரகுமான் ( நேயர் விருப்பம் )

**4] தாரா பாரதி ( திண்ணையை இடித்துத் தெருவாக்கு )**

**8] “புல்லாய்ப் பிறந்தேன் நானென்று” – நீ; புலம்ப வேண்டாம்; நெல்கூட புல்லின் இனத்தைச் சேர்ந்ததுதான் – அது பூமியின் பசியைப் போக்கவில்லை? இந்த பாடல் வரியின் ஆசிரியர் யார்?**

1] வாணிதாசன் ( எழிலோவியம் )

2] காமராசன் ( சூரியகாந்தி )

3] அப்துல் ரகுமான் ( நேயர் விருப்பம் )

**4] தாரா பாரதி ( திண்ணையை இடித்துத் தெருவாக்கு )**

**9] “கடலில் நான் ஒரு துளி யென்று” – நீ; கரைந்து போவதில் பயனென்ன? கடலில் நான்ஒரு முத்தென்று” – நீ காட்டு. உந்தன் தலைதூக்கு! இந்த பாடல் வரியின் ஆசிரியர் யார்?**

1] வாணிதாசன் ( எழிலோவியம் )

2] காமராசன் ( சூரியகாந்தி )

3] அப்துல் ரகுமான் ( நேயர் விருப்பம் )

**4] தாரா பாரதி ( திண்ணையை இடித்துத் தெருவாக்கு )**

**10] வந்தது யாருக்கும் தெரியாது – நீ வாழ்ந்ததை உலகம் அறியாது. சந்ததி கூட மறந்துவிடும் – உன் சரித்திரம் யாருக்கு நினைவுவரும்? இந்த பாடல் வரியின் ஆசிரியர் யார்?**

1] வாணிதாசன் ( எழிலோவியம் )

2] காமராசன் ( சூரியகாந்தி )

3] அப்துல் ரகுமான் ( நேயர் விருப்பம் )

**4] தாரா பாரதி ( திண்ணையை இடித்துத் தெருவாக்கு )**

**11] திண்ணை தானா உன்தேசம்? – உன் தெருவொன் றேயா உன்னுலகம். திண்ணையை இடித்துத் தெருவாக்கு – உன் தெருவை மேலும் விரிவாக்கு! இந்த பாடல் வரியின் ஆசிரியர் யார்?**

1] வாணிதாசன் ( எழிலோவியம் )

2] காமராசன் ( சூரியகாந்தி )

3] அப்துல் ரகுமான் ( நேயர் விருப்பம் )

**4] தாரா பாரதி ( திண்ணையை இடித்துத் தெருவாக்கு )**

**12] எத்தனை உயரம் இமயமலை! – அதில் இன்னொரு சிகரம் உனதுதலை! எத்தனை ஞானியர் பிறந்த தரை – நீ இவர்களை விஞ்சிட என்னதடை? இந்த பாடல் வரியின் ஆசிரியர் யார்?**

1] வாணிதாசன் ( எழிலோவியம் )

2] காமராசன் ( சூரியகாந்தி )

3] அப்துல் ரகுமான் ( நேயர் விருப்பம் )

**4] தாரா பாரதி ( திண்ணையை இடித்துத் தெருவாக்கு )**

**13] பூமிப் பந்து என்னவிலை? – உன்; புகழைத் தந்து வாங்கும்விலை! நாமிப் பொழுதே புறப்படுவோம் – வா நல்லதை எண்ணிச் செயல்படுவோம்! இந்த பாடல் வரியின் ஆசிரியர் யார்?**

1] வாணிதாசன் ( எழிலோவியம் )

2] காமராசன் ( சூரியகாந்தி )

3] அப்துல் ரகுமான் ( நேயர் விருப்பம் )

**4] தாரா பாரதி ( திண்ணையை இடித்துத் தெருவாக்கு )**

**14] கவிஞர் தாராபாரதி அவர்கள் ஒரு ------------------?**

1] மருத்துவர்

**2] ஆசிரியர்**

3] நீதிபதி

4] இவற்றில் ஏதுமில்லை

**குறிப்பு :- கவிஞர் தாராபாரதி அவர்கள் தமிழக அரசின் நல்லாசிரியர் விருது பெற்றவர்.**

**15] புதிய விடியல்கள், இது எங்கள் கிழக்கு ஆகிய கவிதைகளின் ஆசிரியர் யார்?**

1] ந.காமராசன்

2] வாணிதாசன்

**3] தாராபாரதி**

4] அழ.வள்ளியப்பா

**16] கவிஞர் தாராபாரதி அவர்களின் காலம்?**

**1] 26.02.1947 முதல் 13.05.2000 வரை**

2] 26.02.1957 முதல் 13.06.2000 வரை

3] 26.02.1967 முதல் 13.07.2005 வரை

4] 26.02.1977 முதல் 13.08.2010 வரை

**17] முத்துராமலிங்கர் இராமநாதபுரம் மாவட்டத்தில் பசும்பொன் என்னும் ஊரில் ------------- ஆம் ஆண்டு பிறந்தார்.**

1] 1899

2] 1902

3] 1905

**4] 1908**

**18] முத்துராமலிங்கர் அவர்கள் பிறந்த நாள் எது?**

1] 13.9.1899

2] 31.11.1902

3] 11.10.1905

**4] 30.10.1908**

**19] முத்துராமலிங்கர் அவர்களின் பெற்றோர் பெயர்?**

**1] உக்கிர பாண்டியனார் - இந்திராணி அம்மையார்**

2] சாத்தப்பன் - விசாலாட்சி

3] முத்தையா - ராஜம்மாள்

4] வெங்கட்ராமன் - அம்மணி அம்மாள்

**20] முத்துராமலிங்கர் அவர்கள், பாட்டியின் வீட்டில் இருந்த பொழுது, அவருக்கு கற்பித்தவர் யார்?**

1] வேங்கட மகாலிங்கம்

2] மீனாட்சி சுந்தரம்

3] சுத்தானந்த பாரதி

**4] குறைவற வாசித்தான்**

**21] முத்துராமலிங்கர் தம் தொடக்கக் கல்வியைக் ----------------- இல் உள்ள தொடக்கப் பள்ளியில் கிறித்தவப் பாதிரியார்களிடம் பெற்றார்.**

1] உதகமண்டலம்

2] வேளாங்கண்ணி

**3] கமுதி**

4] கொடைக்கானல்

winmeen.com

**22] இராமநாதபுரம் அரசு உயர்நிலைப் பள்ளியில் பத்தாம் வகுப்புப் படித்தார். இவர் இராமநாதபுரத்தில் படித்துக் கொண்டிருக்கும்போது, அந்நகரில் ---------------- நோய் பரவியது. அதனால். இவருடைய கல்வியும் நின்றது.**

1] மலேரியா

2] டெங்கு

**3] பிளேக்**

4] காலரா

**23] கீழ்க்கண்ட கூற்று யாரைப்பற்றியது?**

**பள்ளிப்படிப்பு நின்றாலும் கேள்வியறிவையும் பட்டறிவையும் மிகுதியாகப் பெற்றார். தமிழ், ஆங்கிலம் ஆகிய இருமொழியிலும் வல்லமை பெற்றார். அம்மொழிகளில் சொற்பொழிவு ஆற்றும் திறன் பெற்றார். சிலம்பம், குதிரை ஏற்றம், துப்பாக்கிச் சுடுதல், சோதிடம், மருத்துவம் ஆகியவனவற்றைக் கற்றறிந்தார். இளமையிலேயே அரசியலில் ஆர்வங்கொண்டர்.**

1] பாரதியார்

2] வீரபாண்டிய கட்டபொம்மன்

**3] முத்துராமலிங்கர்**

4] வேலுநாச்சியார்

**24]** முத்துராமலிங்கர் ---------------- **சிற்றூர்களில் தமக்குச் சொந்தமாக இருந்த நிலங்களை உழுத தாழ்த்தப்பட்ட மக்களுக்குப் பங்கிட்டுக் கொடுத்து மகிழ்ந்தார். இவர் நிலக்கிழார் ஒழிப்பிலும், ஆலய நுழைவுப் போராட்டத்திலும் முன்னின்ற வீரர். சமபந்தி முறைக்கும் ஊக்கமளித்த பெருமகனாவார்.**

1] 15

2] 23

**3] 32**

4] 45

**25] கீழ்க்கண்ட கூற்று யாரைப்பற்றியது?**

**இவர் காலத்தில் ஆங்கில அரசு, குற்றப் பரம்பரைச் சட்டம் இயற்றி மக்களுள் சிலரை ஒதுக்கி வைத்திருந்தது. அவ்வினத்தின் துயர் களைய அரும்பாடுபட்டார். அவர்களுடைய வாழ்க்கை உயர்வுக்காகப் போராடினார். அதனால், குற்றப் பரம்பரையிலிருந்து அவர்களை விடுதலை பெறச் செய்தார்.**

1] பாரதியார்

2] வீரபாண்டிய கட்டபொம்மன்

**3] முத்துராமலிங்கர்**

4] வேலுநாச்சியார்

**26] "சாதியையும் நிறத்தையும் பார்த்து மனிதனை மனிதன் தாழ்வுபடுத்துவது பெருங்கொடுமை, ஆண்டவன் மனித குலத்தைத்தான் படைத்தானே தவிரச் சாதியையும் நிறத்தையும் அல்ல. சாதியும் நிறமும் அரசியலுக்கும் இல்லை; ஆன்மீகத்திற்கும் இல்லை" எனச் சாதியைப் பற்றிக் கூறியுள்ளவர் யார்?**

1] பாரதியார்

2] வீரபாண்டிய கட்டபொம்மன்

**3] முத்துராமலிங்கர்**

4] வேலுநாச்சியார்

**27] இவர், வங்கச் சிங்கமான நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவர்களைத் தம் அரசியல் வழிகாட்டியாகக் கொண்டார். தமிழகத்தின் சிங்கமானார்.**

1] பாரதியார்

2] வீரபாண்டிய கட்டபொம்மன்

**3] முத்துராமலிங்கர்**

4] வேலுநாச்சியார்

**28] விடுதலைப்போர் கடுமையாக இருந்த நாள்களில் ஆங்கில அரசு, வடஇந்தியாவில் திலகருக்கும் தென்னிந்தியாவில் முத்துராமலிங்கருக்கும் வாய்ப்பூட்டுச் சட்டம் போட்டது. மக்களிடையே விடுதலை வேட்கையினை ஊட்டியவர் இவர். முத்துராமலிங்கரை "தேசியம் காத்த செம்மல்" என -------------------- என்பவர் இவரைப் பாராட்டியுள்ளார்.**

1] பாரதியார்

**2] திரு. வி. கலியாண சுந்தரனார்.**

3] மு.வரதராசனார்

4] பெரியார்

**29] "சுதந்தரப் பயிரைத் தண்ணீர் விட்டோ வளர்த்தோம்; கண்ணீரால் காத்தோம்' என்பது ---------------- என்பவரின் வாக்கு.**

**1] பாரதியார்**

2] பாரதிதாசன்

3] திரு.வி.க

4] அண்ணா

**30] முத்துராமலிங்கர் தேர்தலில் எத்தனை முறை போட்டியிட்டார்?**

1] 3 2] 4 **3] 5** 4] 6

**குறிப்பு :- 1937, 1946, 1952, 1957, 1962 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற தேர்களின் முடிவுகள் இவர் பெற்றிருந்த மக்கட் செல்வாக்கைக் காட்டின.**

**31] தெய்வீகம், தேசியம் ஆகிய இரண்டையும் இரு கண்களாகப் போற்றியவர் இவர். "வீரம் இல்லாத வாழ்வும், விவேகமில்லாத வீரமும் வீணாகும்" என எடுத்துரைத்தார்.**

1] பாரதியார்

**2] முத்துராமலிங்கர்**

3] திரு.வி.க

4] மு.வரதராசனார்

**32] இவர் சமயச் சான்றோராகவும் கருதப்பட்டார். வேதாந்த பாஸ்கர், பிரணவ கேசரி, சன்மார்க்க சண்டமாருதம், இந்து புத்த சமய மேதை எனப் பலவாறாகப் பாராட்டப் பெற்றவர் யார்?**

1] பாரதியார்

**2] முத்துராமலிங்கர்**

3] திரு.வி.க

4] மு.வரதராசனார்

**33] விவேகானந்தரின் தூதராக, நேதாஜின் தளபதியாக, சத்தியசீலராக, முருகபக்தராக,ஆன்மீகப் புத்திரராக, தென்பாண்டிச் சீமையின் முடிசூடா மன்னராக, நீதிவழுவா நேர்மையாளராக, புலமையில் கபிலராக, வலிமையில் கரிகாலனாக, கொடையில் கர்ணனாக, பக்தியில் பரமஹம்சராக, இந்தியத் தாயின் நன்மகனாக வாழ்ந்தவர் யார்?**

1] பாரதியார்

**2] முத்துராமலிங்கர்**

3] திரு.வி.க

4] மு.வரதராசனார்

**34] "பனைமரத்திலிருந்து விழுந்து பிழைத்தவனும் உண்டு. வயல் வரப்பில் வழுக்கி விழுந்து இறந்தவனும் உண்டு. என்று கூறியவர் யார்?**

1] பாரதியார்

**2] முத்துராமலிங்கர்**

3] திரு.வி.க

4] மு.வரதராசனார்

**35] மனிதனின் மனநிலையை இருள், மருள், தெருள், அருள் எனக் குறிப்பிட்டவர் யார்?**

1] பாரதியார்

**2] முத்துராமலிங்கர்**

3] திரு.வி.க

4] மு.வரதராசனார்

**36] முத்துராமலிங்கர் எத்தனை ஆண்டுகள் வாழ்ந்தார்?**

1] 45

**2] 55**

3] 65

4] 75

**37] முத்துராமலிங்கர் மறைந்த வருடம்?**

1] 13.10.1936

2] 10.13.1936

3] 13.10.1963

**4] 30.10.1963**

**38] தமிழ்நாடு அரசு முத்துராமலிங்கம் அவர்களை போற்றும் வகையில் ---------------------- இல் இவருடைய உருவச் சிலையினை நிறுவியுள்ளது. அச்சிலை நிறுவப்பட்டுள்ள சாலைக்கு இவர் பெயர் சூட்டப்பட்டுள்ளது.**

1] திருச்சி

2] இராமநாதபுரம்

3] மதுரை

**4] சென்னை**

**39] முத்துராமலிங்கரின் விருப்பத்திற்க்கு இணங்க 06.09.1939 இல் மதுரைக்கு --------------------- வருகை தந்தார்.**

1] காந்தி

2] நேரு

**3] நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ்**

4] வல்லபாய் படேல்

**40] நடுவண் அரசு ------------- இல் முத்துராமலிங்கருடைய அஞ்சல் தலையை வெளியிட்டுச் சிறப்பித்தது.**

1] 1990

**2] 1995**

3] 2000

4] 2005

**41] ------------------------என்பவர், தம் சொத்துகள் முழுவதையும் 17 பாகங்களாகப் பிரித்து, ஒரு பாகத்தை மட்டும் தனக்கு வைத்துக்கொண்டு மீதி 16 பாகங்களையும் 16 பேருக்கு இனாம் சாசனமாக எழுதி வைத்தார்.**

1] பாரதியார்

**2] முத்துராமலிங்கர்**

3] திரு.வி.க

4] மு.வரதராசனார்

**42] உதுக்காண் என்றால், ---------------என்பது பொருள்.**

**1] சற்றுத் தொலைவில் பார்**

2] முதுகுப் பக்கம்

3] மேலே

4] இவற்றுள் ஏதுமில்லை

**43] உப்பக்கம் என்றால், ---------------என்பது பொருள்.**

1] சற்றுத் தொலைவில் பார்

**2] முதுகுப் பக்கம்**

3] மேலே

4] இவற்றுள் ஏதுமில்லை

**44] உம்பர் என்றால், ---------------என்பது பொருள்.**

1] சற்றுத் தொலைவில் பார்

2] முதுகுப் பக்கம்

**3] மேலே**

4] இவற்றுள் ஏதுமில்லை

**45] கடலில் எதுவாக இருத்தல் வேண்டும் என்று தாராபாரதி கூறுகிறார்?**

1] துளி

**2] முத்து**

3] கப்பல்

4] மீன்

**46] நீதி தேவதையால் தண்டிக்கப்பட்டவர்?**

1] முடவர்

**2] ஊர்த்தலைவர்**

3] பார்வையற்றவர்

4] பொதுமக்கள்

## ஆறாம் வகுப்பு - பொதுத்தமிழ் பாடக்குறிப்புகள் பகுதி – 7

**1] விடுபட்டதை நிரப்புக**

**இன்சொலால் ஈரம் அளைஇப் படிறுஇலவாம்**

**-------------- ------------- -------------**

**1] செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்**

2] இன்சொலன் ஆகப் பெறின்

3] இன்சொ லினிதே அறம்

4] இன்புறூஉம் இன்சொ லவர்க்கு

**2] விடுபட்டதை நிரப்புக**

**அகனமர்ந்து ஈதலின் நன்றே முகனமர்ந்து**

**------------- ------------ ------------**

1] செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்

**2] இன்சொலன் ஆகப் பெறின்**

3] இன்சொ லினிதே அறம்

4] இன்புறூஉம் இன்சொ லவர்க்கு

**3] விடுபட்டதை நிரப்புக**

**முகத்தான் அமர்ந்தினிது நோக்கி அகத்தானாம்**

**------------- ------------ ------------**

1] செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்.

2] இன்சொலன் ஆகப் பெறின்

**3] இன்சொ லினிதே அறம்**

4] இன்புறூஉம் இன்சொ லவர்க்கு

**4] விடுபட்டதை நிரப்புக**

**துன்புறூஉம் துவ்வாமை இல்லாகும் யார்மாட்டும்**

------------- ------------ ------------

1] செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்

2] இன்சொலன் ஆகப் பெறின்

3] இன்சொ லினிதே அறம்

**4] இன்புறூஉம் இன்சொ லவர்க்கு**

**5] விடுபட்டதை நிரப்புக**

**பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு**

------------- ------------ ------------

**1] அணியல்ல மற்றுப் பிற**

2] இன்சொலன் ஆகப் பெறின்

3] இன்சொ லினிதே அறம்

4] இன்புறூஉம் இன்சொ லவர்க்கு

**6] விடுபட்டதை நிரப்புக**

**அல்லவை தேய அறம்பெருகும் நல்லவை**

---------- ------------ ----------

**1] நாடி இனிய சொலின்**

2] பண்பின் தலைப்பிரியாச் சொல்

3] இம்மையும் இன்பந் தரும்

4] வன்சொல் வழங்கு வது

**7] விடுபட்டதை நிரப்புக**

**நயன்ஈன்று நன்றி பயக்கும் பயன்ஈன்று**

---------- ------------ ---------

1] நாடி இனிய சொலின்

**2] பண்பின் தலைப்பிரியாச் சொல்**

3] இம்மையும் இன்பந் தரும்

4] வன்சொல் வழங்கு வது

**8] விடுபட்டதை நிரப்புக**

**சிறுமையுள் நீங்கிய இன்சொல் மறுமையும்**

---------- ------------ ---------

1] நாடி இனிய சொலின்

2] பண்பின் தலைப்பிரியாச் சொல்

**3] இம்மையும் இன்பந் தரும்**

4] வன்சொல் வழங்கு வது

**9] விடுபட்டதை நிரப்புக**

**இன்சொல் இனிதீன்றல் காண்பான் எவன்கொலோ**

---------- ------------ ----------

1] நாடி இனிய சொலின்

2] பண்பின் தலைப்பிரியாச் சொல்

3] இம்மையும் இன்பந் தரும்

**4] வன்சொல் வழங்கு வது**

**10] விடுபட்டதை நிரப்புக**

**இனிய உளவாகஇன்னாத கூறல்**

---------- ------------ ----------

**1] கனிஇருப்பக் காய்கவர்ந் தற்று**

2] பண்பின் தலைப்பிரியாச் சொல்

3] இம்மையும் இன்பந் தரும்

4] வன்சொல் வழங்கு வது

**11] பொருந்தாதது எது? சொற்பொருள் தருக.**

**1] ஈரம் – கோபம்**

2] அளைஇ – கலந்து

3] படிறு – வஞ்சம்

4] செம்பொருள் – மெய்ப்பொருள்

**குறிப்பு :- ஈரம் – அன்பு**

**12] பொருந்தாதது எது? சொற்பொருள் தருக.**

1] அகன் – அகம், உள்ளம்

2] அமர் – விருப்பம்

3] அமர்ந்து - விரும்பி

**4] முகன் – தலை**

**குறிப்பு :- முகன் – முகம்**

**13] பொருந்தாதது எது? சொற்பொருள் தருக.**

1] துவ்வாமை – வறுமை

**2] அல்லவை – நல்லது**

3] நாடி – விரும்பி

4] பயக்கும் – கொடுக்கும்

**குறிப்பு :- அல்லவை – பாவம்**

**14] பொருந்தாதது எது? சொற்பொருள் தருக.**

**1] சிறுமை – இன்பம்**

2] மறுமை – மறுபிறவி

3] இம்மை – இப்பிறவி

4] கவர்தல் – நுகர்தல்

**குறிப்பு :- சிறுமை – துன்பம்**

**15] செய்யும் தொழிலே தெய்வம் – அந்தத் திறமைதான் நமது செல்வம் கையும் காலுந்தான் உதவி - இந்த பாடல் வரியின் ஆசிரியர் யார்?**

1] வாணிதாசன் ( எழிலோவியம் )

2] காமராசன் ( சூரியகாந்தி )

**3] பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் (செய்யும் தொழிலே தெய்வம்)**

4] தாரா பாரதி ( திண்ணையை இடித்துத் தெருவாக்கு )

**16] கொண்ட கடமைதான் நமக்குப் பதவி ; பயிரை வளர்த்தால் பலனாகும் – அது உயிரைக் காக்கும் உணவாகும் - இந்த பாடல் வரியின் ஆசிரியர் யார்?**

1] வாணிதாசன் ( எழிலோவியம் )

2] காமராசன் ( சூரியகாந்தி )

**3] பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் (செய்யும் தொழிலே தெய்வம்)**

4] தாரா பாரதி ( திண்ணையை இடித்துத் தெருவாக்கு )

**17] வெயிலே நமக்குத் துணையாகும் – இந்த; வேர்வைகள் எல்லாம் விதையாகும் தினம் வேலையுண்டு குல மானமுண்டு - இந்த பாடல் வரியின் ஆசிரியர் யார்?**

1] வாணிதாசன் ( எழிலோவியம் )

2] காமராசன் ( சூரியகாந்தி )

**3] பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் (செய்யும் தொழிலே தெய்வம்)**

4] தாரா பாரதி ( திண்ணையை இடித்துத் தெருவாக்கு )

**18] வருங்காலமுண்டு அதை நம்பிடுவோம் காயும் ஒருநாள் கனியாகும் – நம் கனவும் ஒருநாள் நனவாகும் - இந்த பாடல் வரியின் ஆசிரியர் யார்?**

1] வாணிதாசன் ( எழிலோவியம் )

2] காமராசன் ( சூரியகாந்தி )

**3] பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் (செய்யும் தொழிலே தெய்வம்)**

4] தாரா பாரதி ( திண்ணையை இடித்துத் தெருவாக்கு )

**19] காயும் கனியும் விலையாகும் – நம் கனவும் நினைவும் நிலையாகும் – உடல் வாடினாலும் பசி மீறினாலும் – வழி மாறிடாமலே வாழ்ந்திடுவோம் - இந்த பாடல் வரியின் ஆசிரியர் யார்?**

1] வாணிதாசன் ( எழிலோவியம் )

2] காமராசன் ( சூரியகாந்தி )

**3] பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் (செய்யும் தொழிலே தெய்வம்)**

4] தாரா பாரதி ( திண்ணையை இடித்துத் தெருவாக்கு )

**20] மக்கள் கவிஞர் என அழைக்கப்படுபவர்?**

1] வாலி

2] திரு.வி.க

**3] பட்டுக்கோட்டைக் கல்யாண சுந்தரம்**

4] கண்ணதாசன்

**21] கீழ்க்கண்ட கூற்று யாருடன் தொடர்புடையது?**

**எளிய தமிழில் அனைவருக்கும் புரியும்படி கவிதைகளை இயற்றியவர். திரையிசைப் பாடல்களையும் இயற்றியுள்ளார். உழைக்கும் மக்களின் துயரங்களையும் பொதுவுடைமைச் சிந்தனைகளையும் தம்முடைய பாடல்கள்வழிப் பரவலாக்கினார்.**

1] வாலி

2] திரு.வி.க

**3] பட்டுக்கோட்டைக் கல்யாண சுந்தரம்**

4] கண்ணதாசன்

**22] கல்யாண சுந்தரம் எந்த ஊரில் பிறந்தவர்?**

1] பட்டுக்கோட்டை அருகே உள்ள துள்ளம்

2] பட்டுக்கோட்டை அருகே உள்ள இலட்சுமிபுரம்

3] பட்டுக்கோட்டை அருகே உள்ள திருநின்றவூர்

**4] பட்டுக்கோட்டை அருகே உள்ள செங்கப்படுத்தான்காடு**

**23] கல்யாண சுந்தரம் அவர்களின் காலம்?**

**1] 13.04.1930 முதல் 08.10.1959 வரை**

2] 13.04.1940 முதல் 08.10.1969 வரை

3] 13.04.1950 முதல் 08.10.1979 வரை

4] 13.04.1970 முதல் 08.10.1989 வரை

**24] கும்பகோணம் - இவ்வூரின் ------------------ திசையில் அரிசிலாறு (அரசலாறு) பாய்கிறது.**

1] கிழக்கு

2] மேற்கு

3] வடக்கு

**4] தெற்கு**

**25] அரிசிலாறு (அரசலாறு) - இதன் --------------- கரையில் தாராசுரம் என்னும் ஊர் அமைந்துள்ளது.**

1] கிழக்கு

2] மேற்கு

3] வடக்கு

**4] தெற்கு**

**26] ஐராவதீசுவரர் கோவில் உள்ள இடம்?**

1] நாகப்பட்டினம்

**2] தாராசுரம்**

3] திருவாரூர்

4] காஞ்சிபுரம்

**27] ஐராவதீசுவரர் கோவில் ஏறத்தாழ எண்ணூறு ஆண்டுகளுக்கு முன் ------------------ என்பவரால் கட்டப்பட்டது.**

1] முதலாம் ராஜேந்திரன்

2] இரும்பொறை

3] கரிகாலன்

**4] இரண்டாம் இராசராச சோழன்**

**28] பொருந்தாதது எது?**

1] முப்புரம் எரித்தவன் - திரிபுராந்தகன்

2] யானை உரி போர்த்தவர் - கஜசம்கார மூர்த்தி

3] அடிமுடி தேடவைக்கும் அண்ணாமலையார் - லிங்கோத்பவர்

**4] நவ்வி - கரடி**

**குறிப்பு :- நவ்வி - மான்**

**29] தாராசுரம் கோவிலின் கூம்பிய விமானத்தோற்றமும், அதற்குக் கீழே இருபுறமும் யானைகளும் குதிரைகளும் பூட்டிய இரதம்போல் அமைந்த மண்டபமும் வான்வெளி இரகசியத்தைக் காட்டுவதாக -------------- அறிஞர் குறிப்பிட்டுள்ளார்.**

1] ஐசக் நியூட்டன்

**2] கார்ல் சேகன்**

3] லார்ட் லட்மன்ட்

4] இவர்களில் யாருமில்லை

**30] கியூரி அம்மையார் ------------- நாட்டில் பிறந்தார்.**

1] அமெரிக்கா

2] இங்கிலாந்து

3] கனடா

**4] போலந்து**

**31] கியூரி அம்மையார் ------------- ஆம் ஆண்டு பிறந்தார்.**

1] 1837

2] 1847

3] 1857

**4] 1867**

**32] கியூரி அம்மையார் அவர்களின் பெற்றோர்க்கு மொத்தம் ---------------- குழந்தைகள். இவரே அவர்களுள் இளையவர்.**

1] 3 2] 4 **3] 5** 4] 6

**33] கியூரி அம்மையார் அவர்களின் தந்தை ஓர் -------------- ஆசிரியர்.**

1] கணிதம்

**2] அறிவியல்**

3] வரலாறு

4] பொருளாதாரம்

**34] கியூரி அம்மையார் அவர்களின் தமக்கை ---------------- கல்வி பயில விரும்பினார்.**

1] கணிதம்

**2] மருத்துவம்**

3] வரலாறு

4] பொருளாதாரம்

**35] கியூரி அம்மையார் (மேரி) ------------ நாடு சென்று கல்லூரியில் சேர்ந்தார்.**

**1] பிரான்சு**

2] இங்கிலாந்து

3] எகிப்து

4] கனடா

**36] கியூரி அம்மையார் (மேரி) அவர்களின் கணவர் பெயர்?**

**1] பியரி கியூரி**

2] தாமசு கியூரி

3] ஆத்வின் கியூரி

4] வின்சென்டு கியூரி

winmeen.com

**37] அறிவியல் மேதை ஏ.எச்.பெக்காரல் என்பவருடன், பியரி கியூரியும் மேரி கியூரியும் ------------------- இல் ஆராய்ச்சியை மேற்கொண்டனர்.**

**1] இயற்பியல்**

2] வேதியியல்

3] தாவரவியல்

4] விலங்கியல்

**38] கணவன் – மனைவி இருவரும் முதலில் பொலோனியம் என்னும் தனிமப் பொருளைக் கண்டுபிடித்தனர். அதன்பிறகு, மேலும் இரண்டு ஆண்டுகள் தொடர்ந்து ஆராய்ச்சி செய்து, ரேடியம் என்னும் தனிமப் பொருளைக் கண்டுபிடித்தனர். இவ்விரண்டு அரிய கண்டுபிடிப்புக்காக ஏ.எச்.பெக்காரலுக்கும், பியரி கியூரி, மேரி கியூரி இணையருக்கும் --------------------- ஆம் ஆண்டு இயற்பியலுக்கான நோபல் பரிசு பிரித்து வழங்கப்பட்டது. நோபல் பரிசு வரலாற்றில் பரிசு பெற்ற முதல் பெண்மணி மேரி கியூரி ஆவார்.**

**1] 1903**

2] 1904

3] 1905

4] 1906

**39] மேரி கியூரி வேதியலில் ஆராய்ச்சிகள் பல செய்து, ரேடியத்தின் அணு எடையைக் கண்டுபிடித்தார். அதற்காக அவருக்கு இரண்டாவது முறையாக ---------------- ஆம் ஆண்டு வேதியலுக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது.**

1] 1909

2] 1910

**3] 1911**

4] 1912

**40] மேரி கியூரி அம்மையார் இயற்கை எய்த ஆண்டு?**

1] 1924

2] 1928

**3] 1934**

4] 1940

**41] மேரி கியூரி அம்மையார் அவர்களின் மகள் பெயர்?**

1] செரின்

2] வின்சுலோ

**3] ஜரின்**

4] இவர்களில் யாருமில்லை

**42] மேரி கியூரி அம்மையார் அவர்களின் மகள் ஜரினும் மருமகன் ஜோலியட் கியூரியும் தொடர்ந்து அறிவியல் ஆராய்ச்சியில் ஈடுபட்டுச் செயற்கைக் கதிர்வீச்சுப் பற்றிய வேதியியல் ஆராய்ச்சிக்காக --------------- ஆம் ஆண்டு நோபல் பரிசு பெற்றனர்.**

1] 1930

**2] 1935**

3] 1938

4] 1940

**43] கியூரி அம்மையார் குடும்பம் எத்தனை நோபல் பரிசு பெற்றது?**

1] 2 **2] 3** 3] 4 4] 5

**44] மனிதனுடைய மனத்தில் உணர்ச்சிகளை எழுப்பி அழகையும் இன்பத்தையும் அளிக்கின்ற பண்பு அழகுக்கலைகளுக்கு உண்டு - என்று கூறியவர் யார்?**

1] கி. ஆ. பெ. விசுவநாதம்

2] ரா.பி.சேதுப்பிள்ளை

3] திரு.வி.க

**4] மயிலை சீனி. வேங்கடசாமி**

**45] அழகுக்கலைகள், மனத்திலே உணர்ச்சியை எழுப்பி அழகுக் காட்சியையும் இன்ப உணர்ச்சியையும் கொடுத்து மகிழ்விக்கிறபடியினாலே, நாகரிகம் படைத்த மக்கள் அழகுக் கலைகளைப் போற்றுகிறார்கள். பேணி வளர்க்கிறார்கள்; துய்த்து இன்புற்று மகிழ்கிறார்கள்; - என்று கூறியவர் யார்?**

1] கி. ஆ. பெ. விசுவநாதம்

2] ரா.பி.சேதுப்பிள்ளை

3] திரு.வி.க

**4] மயிலை சீனி. வேங்கடசாமி**

**46] அழகுக்கலைக்கு இன்கலை என்றும் கவின்கலை என்றும் நற்கலை என்றும் வேறுபெயர்கள் உண்டு. இவ்வழகுக் கலைகள் ஐந்து. அவை, கட்டடக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை, இசைக்கலை, காவியக்கலை என்பன. - இந்த கூற்று யாருடையது?**

1] கி. ஆ. பெ. விசுவநாதம்

2] ரா.பி.சேதுப்பிள்ளை

3] திரு.வி.க

**4] மயிலை சீனி. வேங்கடசாமி**

**47] 'உழவர் ஏரடிக்கும் சிறுகோலே அரசரது செங்கோலை நடத்தும் கோல்' - என்று கூறியவர் யார்?**

1] பாரதியார்

2] ஔவையார்

**3] கம்பர்**

4] வாணிதாசன்

**48] ஏர்த்தொழில் இனிது நடை பெறுவதற்கு மழை இன்றியமையாதது. தாய் முகங்காணாப் பிள்ளையும், மழை முகங்காணாப் பயிரும் செழிப்படைவதில்லை. ஆகவே, தமிழ்நாட்டார் வானத்திலே தவழும் மேகத்தையே நோக்கி வாழ்ந்தார்கள். ஓங்கி உயர்ந்த மலைகளில் மழைமேகம் தவழக் கண்டால் தமிழர் உள்ளம் தழைக்கும். கார்மேகத்தின் இடையே மின்னல் வீசக் கண்டால், அவர் உள்ளம் துள்ளி மகிழும் - இந்த கூற்று யாருடையது?**

1] கி. ஆ. பெ. விசுவநாதம்

**2] ரா.பி.சேதுப்பிள்ளை**

3] திரு.வி.க

4] மயிலை சீனி. வேங்கடசாமி

**49] "உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் - வீணில் உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்வோம்" என்று கூறியவர் யார்?**

**1] பாரதியார்**

2] ஔவையார்

3] கம்பர்

4] வாணிதாசன்

## ஆறாம் வகுப்பு - பொதுத்தமிழ் பாடக்குறிப்புகள் பகுதி – 8

**1] கல்லைத்தான் மண்ணைத்தான் காய்ச்சித்தான்; குடிக்கத்தான் கற்பித் தானா?; இல்லைத்தான் பொன்னைத்தான் எனக்குத்தான்; கொடுத்துத்தான் இரட்சித் தானா? - இந்த பாடல்வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர்?**

1] இராம நாடகம், அருணாசலக்கவிராயர்

2] எழிலோவியம், வாணிதாசன்

**3] தனிப்பாடல் திரட்டு, இராமச்சந்திரக் கவிராயர்**

4] மனித வாழ்க்கையும் காந்தியடிகளும், திரு.வி.க

**2] அல்லைத்தான் சொல்லித்தான் ஆரைத்தான்; நோவத்தான் ஐயோ எங்கும்; பல்லைத்தான் திறக்கத்தான் பதுமத்தான்; புவியில்தான் பண்ணி னானே - இந்த பாடல்வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர்?**

1] இராம நாடகம், அருணாசலக்கவிராயர்

2] எழிலோவியம், வாணிதாசன்

**3] தனிப்பாடல் திரட்டு, இராமச்சந்திரக் கவிராயர்**

4] மனித வாழ்க்கையும் காந்தியடிகளும், திரு.வி.க

**3] வணக்கம்வரும் சிலநேரம் குமர கண்ட; வலிப்புவரும் சிலநேரம் வலியச் செய்யக் கணக்குவரும் சிலநேரம் வேட்டை நாய்போல்; கடிக்கவரும் சிலநேரம் கயவர்க் கெல்லாம் - இந்த பாடல்வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர்?**

1] இராம நாடகம், அருணாசலக்கவிராயர்

2] எழிலோவியம், வாணிதாசன்

**3] தனிப்பாடல் திரட்டு, இராமச்சந்திரக் கவிராயர்**

4] மனித வாழ்க்கையும் காந்தியடிகளும், திரு.வி.க

**4] இணக்கவரும் படிதமிழைப் பாடிப் பாடி; எத்தனைநாள் திரிந்துதிரிந்து உழல்வேன் ஐயா!; குணக்கடலே அருட்கடலே அசுர ரான; குரைகடலை வென்றபரங் குன்று ளானே! - இந்த பாடல்வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர்?**

1] இராம நாடகம், அருணாசலக்கவிராயர்

2] எழிலோவியம், வாணிதாசன்

**3] தனிப்பாடல் திரட்டு, இராமச்சந்திரக் கவிராயர்**

4] மனித வாழ்க்கையும் காந்தியடிகளும், திரு.வி.க

**5] பொருந்தாதது எது? சொற்பொருள் தருக.**

1] இரட்சித்தானா – காப்பாற்றினானா

2] ஆரைத்தான் – யாரைத்தான்

**3] பதுமத்தான் – தாமரையில் உள்ள சிவன்**

4] புவி – உலகம்

**குறிப்பு :- பதுமத்தான் – தாமரையில் உள்ள பிரமன்**

**6] பொருந்தாதது எது? சொற்பொருள் தருக.**

1] குமரகண்ட வலிப்பு – ஒருவகை வலிப்புநோய்

2] குரைகடல் – ஒலிக்கும் கடல்

**3] பரங்குன்றுளான் – திருச்செந்தூரில் உள்ள முருகன்**

4] குணக்கடலே - முருகன்

**குறிப்பு :- பரங்குன்றுளான் – திருப்பரங்குன்றத்தில் உள்ள முருகன்**

**7] நெனச்சதை எல்லாம் எழுதி வச்சது; அந்தக் காலம் – எதையும்; நேரில் பார்த்தே நிச்சயிப்பது; இந்தக் காலம் ஆமா... இந்தக் காலம் - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர் என்ன?**

1] இராம நாடகம், அருணாசலக்கவிராயர்

2] எழிலோவியம், வாணிதாசன்

3] தனிப்பாடல் திரட்டு, இராமச்சந்திரக் கவிராயர்

**4] அந்தக் காலம் இந்தக் காலம், உடுமலை நாராயண கவி**

**8] மழைவரும் என்றே மந்திரம் செபிச்சது; அந்தக் காலம் – அது.. அந்தக் காலம்; மழையைப் பொழிய வைக்கவே எந்திரம் வந்தது; இந்தக் காலம் ஆமா… இந்தக் காலம் - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர் என்ன?**

1] இராம நாடகம், அருணாசலக்கவிராயர்

2] எழிலோவியம், வாணிதாசன்

3] தனிப்பாடல் திரட்டு, இராமச்சந்திரக் கவிராயர்

**4] அந்தக் காலம் இந்தக் காலம், உடுமலை நாராயண கவி**

**9] இழிகுலம் என்றே இனத்தை வெறுத்தது; அந்தக் காலம் – மக்களை; இணைத்து அணைக்க முயற்சி பண்ணுவது; இந்தக் காலம் ஆமா… இந்தக் காலம் - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர் என்ன?**

1] இராம நாடகம், அருணாசலக்கவிராயர்

2] எழிலோவியம், வாணிதாசன்

3] தனிப்பாடல் திரட்டு, இராமச்சந்திரக் கவிராயர்

**4] அந்தக் காலம் இந்தக் காலம், உடுமலை நாராயண கவி**

**10] திரோபதை தன்னைத் துயில் உரிஞ்சது; அந்தக் காலம் பெண்ணைத்; தொட்டுப் பாத்தா சுட்டுப்புடுவான்; இந்தக் காலம் ஆமா… இந்தக் காலம் - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர் என்ன?**

1] இராம நாடகம், அருணாசலக்கவிராயர்

2] எழிலோவியம், வாணிதாசன்

3] தனிப்பாடல் திரட்டு, இராமச்சந்திரக் கவிராயர்

**4] அந்தக் காலம் இந்தக் காலம், உடுமலை நாராயண கவி**

**11] சாஸ்திரம் படிப்பது அந்தக் காலம்; சரித்திரம் படிப்பது இந்தக் காலம்; கோத்திரம் பார்ப்பது அந்தக் காலம்; குணத்தைப் பார்ப்பது இந்தக் காலம் - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர் என்ன?**

1] இராம நாடகம், அருணாசலக்கவிராயர்

2] எழிலோவியம், வாணிதாசன்

3] தனிப்பாடல் திரட்டு, இராமச்சந்திரக் கவிராயர்

**4] அந்தக் காலம் இந்தக் காலம், உடுமலை நாராயண கவி**

**12] பக்தி முக்கியம் அந்தக் காலம்; படிப்பு முக்கியம் இந்தக் காலம்; கத்தி தீட்டுவது அந்தக் காலம்; புத்தி தீட்டுவது இந்தக் காலம் - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர் என்ன?**

1] இராம நாடகம், அருணாசலக்கவிராயர்

2] எழிலோவியம், வாணிதாசன்

3] தனிப்பாடல் திரட்டு, இராமச்சந்திரக் கவிராயர்

**4] அந்தக் காலம் இந்தக் காலம், உடுமலை நாராயண கவி**

**13] பெண்ணைப் பேயெனப் பேசி அணைச்சது; அந்தக் காலம் – வாழ்வின்; கண்ணில் ஒன்றாய் எண்ணி நடப்பது இந்தக் காலம் ஆமா.. இந்தக் காலம் - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர் என்ன?**

1] இராம நாடகம், அருணாசலக்கவிராயர்

2] எழிலோவியம், வாணிதாசன்

3] தனிப்பாடல் திரட்டு, இராமச்சந்திரக் கவிராயர்

**4] அந்தக் காலம் இந்தக் காலம், உடுமலை நாராயண கவி**

**14] "பகுத்தறிவுக் கவிராயார்" எனத் தமிழக மக்களால் அழைக்கபடுபவர் யார்?**

1] பாரதியார்

2] திரு.வி.க

3] வாணிதாசன்

**4] உடுமலை நாராயணகவி**

**15] "பகுத்தறிவுக் கவிராயார் - உடுமலை நாராயணகவி" அவர்களின் காலம்?**

1] 25.09.1869 முதல் 23.05.1961 வரை

2] 25.09.1889 முதல் 23.05.1971 வரை

**3] 25.09.1899 முதல் 23.05.1981 வரை**

4] 25.09.1899 முதல் 23.05.1991 வரை

**16] ----------------------------- என்பவர், தமிழ்த் திரைப்படப்பாடல் ஆசிரியரும் நாடக எழுத்தாளரும் ஆவார்.**

1] பாரதியார்

2] திரு.வி.க

3] வாணிதாசன்

**4] உடுமலை நாராயணகவி**

**17] பொருந்தாதது எது? ஆங்கிலச் சொல் - தமிழ்ச் சொல்.**

**1] போஸ்ட் ஆபீஸ் – அஞ்சல் ஸ்டேஷன்**

2] பஸ் – பேருந்து

3] டிரெயின் – ரயில் வண்டி

4] டிவி – தொலைக்காட்சி

**குறிப்பு :- போஸ்ட் ஆபீஸ் – அஞ்சல் நிலையம்**

**18] பொருந்தாதது எது? ஆங்கிலச் சொல் - தமிழ்ச் சொல்.**

1] டெலிபோன் – தொலைபேசி

2] ரேடியோ – வானொலி

**3] ஃபேன் – காத்தாடி**

4] டிபன் – சிற்றுண்டி

**குறிப்பு :- ஃபேன் – மின்விசிறி**

winmeen.com

**19] பொருந்தாதது எது? ஆங்கிலச் சொல் - தமிழ்ச் சொல்.**

**1] சேர் – ஸ்டூல்**

2] டீ – தேநீர்

3] லைட் – விளக்கு

4] கரண்ட் – மின்சாரம்

**குறிப்பு :- சேர் – நாற்காலி**

**20] பொருந்தாதது எது? ஆங்கிலச் சொல் - தமிழ்ச் சொல்.**

**1] தம்ளர் – கிளாஸ்**

2] சைக்கிள் – மிதிவண்டி

3] ரோடு – சாலை

4] பிளாட்பாரம் – நடைமேடை

**குறிப்பு :- தம்ளர் – குவளை**

**21] பொருந்தாதது எது? ஆங்கிலச் சொல் - தமிழ்ச் சொல்.**

**1] பிளைட் – ஏரோ பிளேன்**

2] ஆபிஸ் – அலுவலகம்

3] பேங்க் – வங்கி

4] சினிமா – திரைப்படம்



winmeen.com

**குறிப்பு :- பிளைட் – வானூர்தி**

**22] பொருந்தாதது எது? ஆங்கிலச் சொல் - தமிழ்ச் சொல்.**

1] தியேட்டர் – திரையரங்கு

2] டைப்ரைட்டர் – தட்டச்சுப்பொறி

3] ஆஸ்பத்திரி – மருத்துவமனை

**4] கம்ப்யூட்டர் – சிஸ்டெம்**

**குறிப்பு :- கம்ப்யூட்டர் – கணினி**

**23] பொருந்தாதது எது? ஆங்கிலச் சொல் - தமிழ்ச் சொல்.**

1] இண்டர்நெட் – இணையம்

2] காலேஜ் – கல்லூரி

3] ஸ்கூல் – பள்ளி

**4] யுனிவர்சிடி – காலேஜ்**

**குறிப்பு :- யுனிவர்சிடி – பல்கலைக்கழகம்**

**24] பொருந்தாதது எது? ஆங்கிலச் சொல் - தமிழ்ச் சொல்.**

1] டெலஸ்கோப் – தொலைநோக்கி

2] மைக்ராஸ்கோப் – நுண்ணோக்கி

**3] தெர்மாமீட்டர் – வெப்பமீட்டர்**



winmeen.com

4] நம்பர் – எண்

**குறிப்பு :- தெர்மாமீட்டர் – வெப்பமானி**

**25] ------------------ என்னும் சொல் ஆதியில் மக்கள் வாழும் நிலத்தைக் குறிப்பதற்கு வழங்கப்பட்டது.**

1] ஊர்

2] மண்டலம்

**3] நாடு**

4] கண்டம்

**26] முந்நாடுகளின் உட்பிரிவு ------------- என அழைக்கப்பட்டன.**

1] ஊர்

2] மண்டலம்

**3] நாடு**

4] கண்டம்

**27] முன்னாளில் முரப்புநாடு என்பது ---------------- மண்டலத்தைச் சேர்ந்த நாடுகளுள் ஒன்று. இப்பொழுது, அப்பெயர் பொருநையாற்றின் கரையிலுள்ள ஒரு சிற்றூரின் பெயராக நிலவுகின்றது.**

1] சேரர்

2] சோழர்

**3] பாண்டியர்**

4] பல்லவர்

**28] கூரைநாடு என்பதே ------------------ என மருவிற்று.**

**1] கொரநாடு**

2] கொடநாடு

3] கொடைரோடு

4] இவற்றில் ஏதுமில்லை

**29] ஆழ்வார்களில் சிறந்த நம்மாழ்வார் பிறந்த இடம் --------------- என்னும் பழம்பெயரைத் துறந்து, ஆழ்வார்திருநகரியாகத் திகழ்கின்றது.**

1] வடுவூர்

2] ஆலவாரூர்

**3] குருகூர்**

4] மருதூர்

**30] மயிலாப்பூரில் உள்ள கபாலீச்சுரம் என்னும் சிவாலயம் மிகப் பழைமை வாய்ந்தது. ---------------------- அதனைப் பாடியுள்ளர்.**

1] கம்பர்

2] ஔவையார்

**3] திருஞானசம்பந்தர்**

4] சுந்தரர்

**31] திருமயிலைக்கு அருகே உள்ள திருவல்லிக்கேணி, முதல் ஆழ்வார்களால் பாடப் பெற்றது. அவ்வூரின் பெயர் -------------------- என்பதாகும்.**

1] ராஜமங்கலம்

**2] அல்லிக்கேணி**

3] கேணியூர்

4] இவற்றில் ஏதுமில்லை

**32] "ஊரும் பேரும்" - என்னும் நூலின் ஆசிரியர் யார்?**

1] திரு.வி.க

**2] ரா.பி.சேதுப்பிள்ளை**

3] மறைமலையடிகள்

4] பெருஞ்சித்திரனார்

**33] நெய்தல் நிலத்தில் அமைந்த வாழ்விடங்கள், ---------------- என்னும் பெயரால் வழங்கப்பெறும்.**

1] பட்டினம்

2] பாக்கம்

**3] குப்பம்**

4] புரம்

**34] கடற்கரைச் சிற்றூர்கள் ---------------- எனப் பெயர் பெறும்.**

1] பட்டினம்

**2] பாக்கம்**

3] புலம்

4] புரம்

**35] கடற்கரையில் உருவாகும் நகரங்கள் ---------------- எனப் பெயர் பெறும்.**

**1] பட்டினம்**

2] பாக்கம்

3] புலம்

4] புரம்

**36] பொருந்தாதது எது?**

1] மெய்யெழுத்து - அரை மாத்திரை

2] உயிரெழுத்து, உயிர்மெய் (குறில்) - ஒரு மாத்திரை

3] உயிரெழுத்து (நெடில்) - இரு மாத்திரை

**4] உயிர்மெய் (நெடில்) - ஒரு மாத்திரை**

**குறிப்பு :- உயிர்மெய் (நெடில்) - இரு மாத்திரை**

**37] திருவண்ணாமலை மலைகாஞ்சி திருக்கா ளத்தி; சீகாழி சிதம்பரம்தென் னாரூர் காசி; குருநாடு கேதாரம் கோலக் கொண்டை; கோகரணம் செகநாதம் கும்ப கோணம் - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல்?**

**1] திருக்குற்றாலக் குறவஞ்சி, திரிகூடராசப்பக் கவிராயர்**

2] கலிங்கத்துப்பரணி, சயம் கொண்டார்

3] புறநானூறு, ஔவையார்

4] நான்மணிக்கடிகை, விளம்பி நாகனார்

**38] அரியலூர் சீரங்கம் திருவா னைக்கா அடங்கலும்போய்ச் சிங்கிதனைத் தேடிச் சிங்கன்; வருசிராப் பள்ளிவிட்டு மதுரை தேடி; மதிகொண்டான் திரிகூடம் எதிர்கண்டானே - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல்?**

**1] திருக்குற்றாலக் குறவஞ்சி, திரிகூடராசப்பக் கவிராயர்**

2] கலிங்கத்துப்பரணி, சயம் கொண்டார்

3] புறநானூறு, ஔவையார்

4] நான்மணிக்கடிகை, விளம்பி நாகனார்

## ஆறாம் வகுப்பு - பொதுத்தமிழ் பாடக்குறிப்புகள் பகுதி – 9

**1] வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும்; மந்திசிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்; கானவர்கள் விழிஎறிந்து வானவரை அழைப்பர்; கமனசித்தர் வந்துவந்து காயசித்தி விளைப்பர் - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல்?**

**1] திருக்குற்றாலக் குறவஞ்சி, திரிகூடராசப்பக் கவிராயர்**

2] கலிங்கத்துப்பரணி, சயம் கொண்டார்

3] புறநானூறு, ஔவையார்

4] நான்மணிக்கடிகை, விளம்பி நாகனார்

**2] தேனருவித் திரைஎழும்பி வானின் வழி ஒழுகும்; செங்கதிரோன் பரிக்காலும் தேர்க்காலும் வழுகும்; கூனல்இளம் பிறைமுடித்த வேணி அலங்காரர்; குற்றாலத் திரிகூட மலை எங்கள் மலையே ! - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல்?**

**1] திருக்குற்றாலக் குறவஞ்சி, திரிகூடராசப்பக் கவிராயர்**

2] கலிங்கத்துப்பரணி, சயம் கொண்டார்

3] புறநானூறு, ஔவையார்

4] நான்மணிக்கடிகை, விளம்பி நாகனார்

**3] ஓடக் காண்பது பூம்புனல் வெள்ளம்; ஒடுங்கக் காண்பது யோகியர் உள்ளம்; வாடக் காண்பது மின்னார் மருங்கு வருந்தக் காண்பது சூல்உளைச் சங்கு - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல்?**

**1] திருக்குற்றாலக் குறவஞ்சி, திரிகூடராசப்பக் கவிராயர்**

2] கலிங்கத்துப்பரணி, சயம் கொண்டார்

3] புறநானூறு, ஔவையார்

4] நான்மணிக்கடிகை, விளம்பி நாகனார்

**4] போடக் காண்பது பூமியில் வித்து புலம்பக் காண்பது கிண்கிணிக் கொத்து தேடக் காண்பது நல்லறம் கீர்த்தி திருக்குற் றாலர் தென் ஆரிய நாடே - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல்?**

**1] திருக்குற்றாலக் குறவஞ்சி, திரிகூடராசப்பக் கவிராயர்**

2] கலிங்கத்துப்பரணி, சயம் கொண்டார்

3] புறநானூறு, ஔவையார்

4] நான்மணிக்கடிகை, விளம்பி நாகனார்

**5] பொருந்தாதது எது? சொற்பொருள் தருக.**

1] வானரங்கள் – ஆண் குரங்குகள்

**2] மந்தி - பெண் யானை**

3] வான்கவிகள் - தேவர்கள்

4] வேணி - சடை

**குறிப்பு :- மந்தி - பெண் குரங்கு**

**6] பொருந்தாதது எது? சொற்பொருள் தருக.**

1] மின்னார் - பெண்கள்

2] மருங்கு - இடை

3] சூல் உளை - கருவைத்தாங்கும் பெண்

**4] பரி - கரடி**

**குறிப்பு :- பரி - குதிரை**

**7] திருக்குற்றாலக் குறவஞ்சி ---------------- இல் ஒன்று.**

1] எட்டுத்தொகை



winmeen.com

2] பத்துப்பாட்டு

3] பதினெண்கீழ்க்கணக்கு

**4] குறவஞ்சி என்னும் இலக்கிய வகை**

**8] பிஞ்சு கிடக்கும் பெருமழைக்குத் தாங்காது; மிஞ்ச அதனுள் வெயில்ஒழுகும் – தஞ்சம்என்றோர்; வேட்டதுஅருள் முத்துசுவா மித்துரைரா சேந்திராகேள் ! கோட்டுமரம் பீற்றல் குடை - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் எது?**

1] புறநானூறு

2] நான்மணிக்கடிகை

3] பழமொழி நானூறு

**4] தனிப் பாடல் திரட்டில் இடம்பெற்றுள்ள சிலேடைப்பாடல் (மரமும் பழைய குடையும்)**

**9] பிஞ்சு கிடக்கும் பெருமழைக்குத் தாங்காது; மிஞ்ச அதனுள் வெயில்ஒழுகும் – தஞ்சம்என்றோர்; வேட்டதுஅருள் முத்துசுவா மித்துரைரா சேந்திராகேள் ! கோட்டுமரம் பீற்றல் குடை - இந்த பாடல் வரியின் ஆசிரியர் யார்?**

1] கம்பர்

2] ஔவையார்

3] பாரதியார்

**4] அழகிய சொக்கநாதப் புலவர்**

**10] அழகிய சொக்கநாதப் புலவர் ------------------- மாவட்டத்தில் உள்ள தச்சநல்லூரில் பிறந்தவர்.**

1] விருதுநகர்

2] தூத்துக்குடி

**3] திருநெல்வேலி**

4] மதுரை

**11] அழகிய சொக்கநாதப் புலவர் அவர்களின் காலம்?**

1] கி.பி. 17 ஆம் நூற்றாண்டு

2] கி.பி. 18 ஆம் நூற்றாண்டு

**3] கி.பி. 19 ஆம் நூற்றாண்டு**

4] கி.பி. 20 ஆம் நூற்றாண்டு

**12] ஒரு சொல்லோ தொடரோ இருபொருள் தருமாறு பாடுவது ------------------ எனப்படும்.**

1] அணி

2] பொருள்கோள்

**3] சிலேடை**

4] வழு

**குறிப்பு :- ஒரு சொல்லோ தொடரோ இருபொருள் தருமாறு பாடுவது சிலேடை எனப்படும். இதனை "இரட்டுறமொழிதல்" எனவும் கூறுவர்.**

**13] இரட்டுறமொழிதல் - பிரித்து எழுதுக.**



winmeen.com

1] இரட்டுற + மொழிதல்

2] இரண்டு + மொழி + தல்

3] இரண்டு + மொழிதல்

**4] இரண்டு + உற + மொழிதல்**

**14] அ. இ, உ - ஆகிய எழுத்துக்கள் ---------------?**

1] வினா எழுத்துகள்

**2] சுட்டெழுத்துகள்**

3] மறை எழுத்துகள்

4] இவற்றில் ஏதுமில்லை

**15] எ, யா, ஆ, ஓ, ஏ - ஆகிய எழுத்துக்கள் ---------------?**

**1] வினா எழுத்துகள்**

2] சுட்டெழுத்துகள்

3] மறை எழுத்துகள்

4] இவற்றில் ஏதுமில்லை

**16] சொல் எத்தனை வகைப்படும்?**

1] 1 2] 2 3] 3 **4] 4**

**குறிப்பு :- சொல் 4 வகைப்படும். அவையாவன:- பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல்.**

**17] பெயர்ச்சொல் எத்தனை வகைப்படும்?**

1] 1 **2] 2** 3] 3 4] 4

**குறிப்பு :- பெயர்ச்சொல் 2 வகைப்படும். அவையாவன:- உயர்திணைச்சொல், அஃறிணைச்சொல்.**

**18] உலகப் புத்தக நாள் ?**

1] ஜனவரி 7

**2] ஏப்ரல் 23**

3] ஜூன் 5

4] டிசம்பர் 7

**19] குழந்தைகள் நாள்?**

1] ஜனவரி 7

**2] நவம்பர் 14**

3] ஜூன் 5

4] டிசம்பர் 7

**20] சுற்றுச்சூழல் நாள்?**

1] ஜனவரி 7

2] நவம்பர் 14

**3] ஜூன் 5**

4] டிசம்பர் 7

**21] கொடி நாள்?**

1] ஜனவரி 7

2] நவம்பர் 14

3] ஜூன் 5

**4] டிசம்பர் 7**

**22] தேசிய ஒருமைப்பட்டு நாள்?**

1] ஜனவரி 7

**2] நவம்பர் 19**

3] ஜூன் 5

4] டிசம்பர் 7

**23] மனித உரிமைகள் நாள்?**

1] ஜனவரி 7

2] நவம்பர் 14

3] ஜூன் 5

**4] டிசம்பர் 10**

winmeen.com